REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

T' Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 21 | சுன்னாகம், விகிர்தி பங்குனி கஉ 25-3-51 ஞாயிறு (காந்தி ஆண்டு 82) | இதழ் 34

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார்வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான
கைக்கடிகாரங்கள், சுவர்மணிக்கூடுகள்
மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள்
விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

## பயங்கர நோய்

### கயரோகத்தைத் தடுக்கமுயற்சி

### ஆசிரியர்களின் அரியசேவை அவசியம்

க்ஷயரோகம் என்ற கொடிய வியாதியை நாட்டினின்றும் அகற்றுவதற்கு, இலங்கைக் கல்விப்பகுதி மிகுந்த அக்கறை காட்டி வருவதுடன், இது விஷயத்தில் வித்தியாதிபதி டொக்டர் ஹௌஸ் அவர்கள் பள்ளிக்கூட ஆசிரியர்களின் உதவியையும் வேண்டியுள்ளார்.

கயரோகம் பீடியாதிருப்பதற்கு எவ்வித வழிவகைகளைக் கையாள வேண்டுமென்பதை விளக்கும் ஒரு சிறு பிரசுரம் ஆசிரியர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. இதிற் கேள்விகளும் அதற்கான விடைகளும் காணப்படுகின்றன.

அதிற் குறிப்பிட்டுள்ள பிரகாரம் பிள்ளைகளுக்குக் கயரோகம் பற்றிப் பேச்சுக்கள் மூலம் விளக்கி வைக்கவேண்டுமென ஆசிரியர்களுக்கு யோசனை கூறப்பட்டுள்ளது.

வித்தியாதிபதி டொக்டர் ஹௌஸ் அவர்கள் பின்வரும் ஐந்து யோசனைகளை ஆசிரியர்களுக்குக் கூறியுள்ளார்.

1. கயரோகத்தைப் பற்றி உண்மையான விபரங்களைக் கூறுவதுடன் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குச் செம்மையும் சுத்தமும் நிறைந்த பழக்க வழக்கங்களின் அவசியத்தை வற்புறுத்தல்.

2. ஆசிரியர்கள் பிள்ளைகளை மிதமிஞ்சிய எவ்வித வேலைகளும் செய்யக் கூடாதெனக் கூறுவதுடன், விளையாட்டுகளில் ஈடுபடச் செய்தல் அவசியம். மிதமிஞ்சி உடம்பை வருத்தினால் கயரோகம் மிக இலகுவாக ஒருவரைப் பீடித்துக்கொள்ளும்.

3. பிள்ளைகளுக்கு வியாதிகள் இருக்கின்றனவோ என்பதை ஆசிரியர் பார்த்தறிந்து, உடனே வைத்தியரை வரவழைத்துப் பிள்ளைகளைப் பரிசோதனை செய்விக்கவேண்டும்.

4. எச்சில் துப்புவது கேடுகெட்ட பழக்கமெனப் பிள்ளைகளுக்கு விளக்கிவைப்பதுடன் அது மிகவும் ஆபத்தானதென்பதையும் வற்புறுத்திவைத்தல் அவசியம்.

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)



இலங்கைக்கு மேலதிகமான அரிசியை பர்மா அரசாங்கத்திடம் பெறுவதற்காக உணவு மந்திரி ஏ. இரத்னாயகா அவர்கள் சென்ற புதன் கிழமை விமான மார்க்கமாக இரங்கூன் சென்றுள்ளார். இவருடன் உள்நாட்டு மந்திரி சேர் ஒலிவர் குணதிலகா அவர்களும் பறந்து சென்றிருக்கின்றார். உணவுப்பகுதி அதிகாரி திரு. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் ஏற்கனவே அங்கு சென்றுள்ளார்.

* * *

இலங்கைமக்கள் தமது நாளாந்தத் தேவைகளைச் சமாளிப்பதற்கு வேண்டிய அரிசி கிடைக்குமாயின் வாழ்க்கைச் செலவு குறையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## தமிழ்த் திருவிழா

### சிலரின் பிழையான பிரசாரம்

### மகாவித்துவான் கணேசையர் விளக்கம்

யாழ்ப்பாணத்தில் ஏப்பிரல் மாதத்தில் நடைபெறவிருக்கும் தமிழ்த் திருவிழாவைப்பற்றித் தவறான எண்ணங்களை நாட்டிற் பரப்புவதில் ஒரு சாரார் ஈடுபட்டிருக்கின்றனர்.

இவர்களிற் சிலர் மகாவித்துவான் சி. கணேசையர் அவர்களை அணுகி அன்னாரின் ஆதரவைப் பெற முயற்சித்தனர். ஐயர் அவர்களின் அபிப்பிராயத்தையும் பெற்றனர். அது பிழையான அபிப்பிராயமென்பதை மகா வித்துவான் கணேசையர் அவர்கள் ஈழகேசரிக்கு எழுதித் தமது நிலையை நன்கு விளக்கியுள்ளார்கள்.

ஐயர் அவர்கள் ஈழகேசரிக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:

வருஞ் சித்திரை மாதத்தில் நிகழவிருக்கும் தமிழ் விழாவைப் பற்றி யான் எழுதிய விஷயமொன்று முன் 'தினகர'னில் வெளிவந்துள்ளது. அதில் தமிழையும் சைவசமயத்தையும் திருத்துபவர்களைச் சேர்க்காது தக்கவர்களைச் சேர்த்து நடத்துவது நலம் என்று எழுதியிருந்தேன். அதில் "தக்கவர்களைச் சேர்த்து நடத்துவது நலம்" என்ற பகுதி விடப்பட்டுள்ளது. எப்படி விடப்பட்டது என்பது தெரியவில்லை. நிற்க, யான் இப்பொழுது தக்க புலவர்களையே சேர்த்து நடத்துவதாக அறிகின்றேன். விசாரித்து அறியாமல் சிலர் சொல்லைக் கேட்டு யான் எழுதியது பிழையாகும். தமிழ்வளர்ச்சிக்குரியவாறு தமிழ் விழா நம் நாட்டிலும் நடப்பது எனக்கும் மகிழ்ச்சியையளிப்பதாகும். யான் அதற்கு மாறானவனல்லன்.

சி. கணேசையர்
புன்னாலைக்கட்டுவன் 20-3-51

## ஆசிய விளையாட்டுகள்

### யப்பானியர் திறன்

புது டில்லியில் இம் மாதம் 3-ம் திகதி தொடக்கம் பத்து நாட்களாக நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்துள்ளன. இதிற் பங்குபற்றிய நாடுகள் பற்பல துறைகளிலே தமது திறமையைக் காட்ட வசதி ஏற்பட்டது. இவ் விளையாட்டில் யப்பானியர் காட்டிய திறமையும் வீரமும் போற்றப்படவேண்டியன. இந்தியரும் சில விளையாட்டுகளில் முதன்மை பெற்றனர். இவ் விளையாட்டுப் போட்டி உலகுக்கு வழுக்கொடுப்பதுடன் ஆசிய மக்களிடையில் ஒற்றுமை, நட்பு, இணக்கம் என்பனவற்றை உண்டாக்குவதற்கும் பேருதவியாகின்றது. அடுத்த முறை விளையாட்டுப் போட்டி பிலிப்பைனின் தீவிலுள்ள மணிலா நகரில் நடைபெறுமெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஐம்பதினாயிரம் மக்கள் இவ் விளையாட்டுகளைக் கண்டுகளித்தனர். சகல ஆசிய நாடுகளும் இதிற் சேர்ந்துகொள்வது மிகப் பிரதானமெனப் பண்டிதர் நேரு மிக உருக்கமாக எடுத்துரைத்தனர்.

## நகரசபை நிர்வாகம்

### ~ சங்கிலித்தோப்பில் விக்கிரகங்கள் ~

நமது நிருபர் கடிதம்

யாழ்ப்பாணம் 23-3-51

யாழ்ப்பாண மேயர் தெரிவு நெருக்கடி ஒருவாறு தீர்ந்துவிட்டதாயினும், சூழ்நிலை இதமாக இருக்கமாட்டாதென்றே கூறவேண்டுமெனக் கடந்த வாரம் எழுதிய கடிதத்திற் குறிப்பிட்டிருந்தேன்.

சென்ற வெள்ளிக்கிழமை (16-3-51) யாழ்ப்பாணம் நகரசபையின் முதலாவது மாதாந்தக்கூட்டம் கூடியபோதே சூழ்நிலை நன்றாக இருக்கவில்லை. போதியளவு அங்கத்தினர் சமுகமளிக்காதபடியாற் கூட்டத்தை நடாத்தமுடியவில்லை. முன்னர் நெருக்கடியை ஏற்படுத்திய அந்த ஆறு அங்கத்தினருமே மீண்டும் முட்டுக்கட்டையிட்டு வருகின்றனர்.

நகரசபைக் கூட்டத்தை நடாத்துவதற்கு வேண்டிய அங்கத்தினரின் தொகையைக் குறைப்பதற்கான சட்டத்தை அரசாங்கம் ஆதரித்துள்ளது. ஆனால் இது ஸ்தல ஸ்தாபன மந்திரியின் அங்கீகாரத்தைப் பெற்றுச் சட்டமாவதற்குச் சிறிதுகாலமெடுக்குமெனத் தெரிகின்றது.

மாதாந்தக் கூட்டங்கள் கூடவியலாது பின்போடப்படின், நகர நிர்வாகத்தில் மிகுந்த தொல்லைகள் ஏற்படுமென மேயர் தெரிவித்துக் கூட்டத்திற் பங்குபற்றாமல் நிற்கும் அங்கத்தினரை ஒத்துழைக்குமாறு வேண்டினார்.



பிரிட்டிஷ் பிரதமர் அட்லி அவர்கள் தமது உடல் நிலையைச் சீர்பெறச் செய்வதற்காக லண்டனில் உள்ள வைத்தியசாலை ஒன்றிலே தங்கியிருந்து ஓய்வு பெற்று வருகின்றார்.

நகரசபை நிர்வாக சம்பந்தமாக ஸ்தல ஸ்தாபன அதிகாரிக்கு எழுதிய கடிதத்தை மேயர் சபை அங்கத்தினருக்கு வாசித்துக் காட்டினார். நகரசபைக் காரியாலயத்துக்குப் போட்டியாக ஒரு காரியாலயம் நடத்துவதாக மேயர் மீது புகார் செய்யப்பட்டது. அது சம்பந்தமாகத் தாம் எழுதிய கடிதத்தில் மேயர் தமது கட்சியை நன்கு விளக்கியுள்ளார்.

### நஷ்ட ஈடு வழக்கு

யாழ்ப்பாணம் நகர மண்டபத்திற் சென்றவருடம் ஜனவரி மாதம் 22-ந் திகதி யன்று பொதுக்கூட்டம் ஒன்றினை நடாத்துவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் பணங் கட்டி ஒப்பந்தம் செய்திருந்தனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி நகரசபை நடக்கத் தவறியதாகக் கோரித் தமிழரசுக் கட்சியினர் யாழ்ப்பாணம் நகரசபை மீது வழக்குத் தொடர்ந்திருந்தனர். இவ் விசாரணை யாழ்ப்பாணம் பெரிய நீதிஸ்தலத்திற் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது.

நீதிஸ்தலத்தில் மேயர் பொன்னம்பலம் அவர்கள் அளித்த வாக்குமூலம் வருமாறு:

நகர மண்டபத்திற் கூட்டம் நடாத்துவதற்காகத் திரு. வன்னியசிங்கம் அவர்கள் செய்த ஏற்பாடு எனக்கு 21-ந் திகதிவரை தெரியாது. இவ் வேற்பாட்டை நீக்கி வைக்குமாறு அங்கத்தினர் சிலர் என்னிடந் தெரிவித்தனர். இது சம்பந்தமாக நான் தீர்மானிக்க முன்னர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் என்னுடைய இல்லத்துக்கு வந்து குறித்த ஏற்பாட்டை நீக்கி விடக்கூடாதெனத் தெரிவித்தார். நகர அமைதிக்குப் பங்கம் ஏற்படக் கூடுமெனவும், நகரசபையிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்களுக்குச் சேதம் ஏற்படக்கூடுமெனவும் நான் திரு. செல்வநாயகம் அவர்களிடந் தெரிவித்தேன். மேயர் என்ற முறையில் நான் எவ்வித கட்சியையுஞ் சேர்ந்தவனல்லன்.

### தமிழிலும் எழுதுக

யாழ்ப்பாணத் தீவுகளின் மகாஜனசபையானது பிரதமர் சேனநாயகாவும் வேறு சில பிரமுகர்களும் செய்துள்ள விண்ணப்பம் ஒன்றினிற் கொழும்பு நகரசபை எல்லைக்குள் உள்ள விளம்பரங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளன. இவ்விளம்பரங்கள் ஆங்கிலத்திலுஞ் சிங்களத்திலும் மாத்திரம் இருப்பதாகவும், அவற்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

## ஊர் வதந்தி

கொண்டோடி

- போராதனையிலுள்ள பல்கலைக் கழகத்திற் புத்தவிகாரை அமைக்கப்படுமாம்.
- பிரதமர் சேனநாயகா அதற்கு அஸ்திவாரக்கல் நாட்டினராம்.
- யூ. என். பி. கட்சியின் அஸ்திவாரத்தைத் தகர்க்க ஸ்ரீலங்கா குடியரசுக் கட்சி தோன்றியுள்ளதாம்.
- தோன்றி மறையுங் கட்சிகள் இலங்கையிற் பலாகமாம்.
- ஐக்கிய முன்னணியும் அதில் ஒன்றும்.
- சகல முன்னேற்றக் கட்சிகளையும் இது தனக்குள் அடக்குமாம்.
- அடிக்கியாளுங் காலத்துக்கு அரோகராப் போட்டாகிவிட்டதாம்.
- அரசாங்கக் கட்சி இன்று அடக்கியாள முற்பட்டுவிட்டதாம்.
- வவனியாப் பிரதிநிதி சுந்தரலிங்கம் சுதந்திரத்தை அடகு வைக்க மாட்டாராம்.
- வீரசுதந்திரம் பேசிய ஒருசில தமிழர்களுக்கு இப்போது நாசிப்பிடிப்பாம்.
- தேசியக் கொடியிலுள்ள சிங்கம் வாளைப்பிடித்துக் கொண்டு நிற்கின்றதாம்.
- சிங்கக்கொடியை எதிர்த்தவர்கள் வாலைச் சுருட்டி விட்டனராம்.
- யாழ்ப்பாணச் சுருட்டுக்கும் மதிப்புக் குறைகின்றதாம்.
- 'மயில்' விலாசமிட்ட 'சிகரெட்' தான் இதற்குக் காரணமாம்.
- காரணமில்லாமற் 'சிகரெட்' புகையாதாம்.
- எரிந்து புகைவது மனித சுபாவமாம்.
- மந்திரிமாரை வரவேற்பது மக்களின் சுபாவமாம்.
- மந்திரி பண்டாரநாயகா மன்னார்ப் பகுதியிலே இக் விஜயம் செய்தாராம்.
- விஜயம் செய்தபோது எருக்கலம்பிட்டியையும் தரிசித்தாராம்.
- எருக்கலம்பிட்டி முஸ்லீம்கள் மந்திரிக்கு 200 மாலைகள் சூட்டினராம்.
- மாலை சூட்டுவதென்றாற் குல்லாப்போடுவதாம்.
- கதர்க்குல்லா முக்கியமல்லவாம்.
- குல்லாய்க்கு அடியில் இருப்பதே முக்கியமானதாம். குல்லாவைப்போட்டுக் குல்லாப்போட்டிருக்கலாமாம்.
- குல்லா மாறுவதும் வழக்கமாம்.
- மக்களின் போக்குவரக்கும் மாறுமாம்.
- எப்போதும் ஒன்று போலவே இருக்க முடியாதாம்.
- அன்று கட்சிப்போர் நடாத்தினர்களாம்.
- இன்று பதவிப்போர் நடைபெறுகின்றதாம்.
- வாழ்நாள் முழுதும் தியாகம் செய்துகொண்டிருக்க முடியாதாம்.
- பிழைக்கும் வழியையும் பார்க்கவேண்டுமாம்.
- பத்திரிகை இல்லார்க்கு இவ்வுலகம் இல்லையாம்.
- பத்திரிகை உள்ளவர்களுக்குப் பகுத்தறிவு இல்லையாம்.

## முஸ்லீம்கள் தமிழ்ப் பற்று

### கல்விமந்திரி கனகரத்தினம் பேச்சு

'இலங்கையிலுள்ள முஸ்லீம் சகோதரர்களுக்கும், தமிழருக்கும் சமயத்துறையில் வேறுபாடுகளிருக்கலாம். ஆனால் தாய்மொழியானது இருசாராருக்கும் ஒன்றுதான். பண்டுதொட்டு வளர்ந்துவரும் இத்தொடர்பை எந்தச் சந்ததியாலும் அறுத்துவிட முடியாது. இந்த உண்மையை உணர்ந்துதான், ஏப்பிரல் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடக்கவிருக்கும் தமிழ் விழாவில் முஸ்லீம் பெரியார்கள் விசேஷ கவனமெடுத்துழைத்துவருகிறார்கள்' என்று தற்காலிக கல்விமந்திரி திரு. கே: கனகரத்தினம் அவர்கள் போராதனை அரசினர் தமிழ்ப் பாடசாலை பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் அமைக்கப்பெற்ற புதுக் கட்டிடத்தைச் சமீபத்திலே திறந்து வைத்துப் பேசும்போது குறிப்பிட்டார். 'மத்திய இலங்கை முஸ்லீம் மக்களுக்குச் சிங்களந்தான் தாய்மொழியாகவேண்டும்' என்று கூறியகண்டிமுஸ்லிம்லீக்காரியதரிசி ஜனாப் ஹுஸைன் அவர்களுக்குப் பதிலளிக்கும் முகமாகவே கல்வி மந்திரி இவ்வாறு கூறியிருந்தார்.

இத்திறப்புவிழாவுக்கு மத்திய மாகாண வித்தியா அதிகாரி திரு. டி. ஜி. குலத்துங்க அவர்கள் தலைமை வகித்துப் பாடசாலை பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் நன்முயற்சியைப் பெரிதும் பாராட்டிப் பேசினார்.

கௌரவ காரியதரிசி திரு. எஸ். எம். ஏ. வேதநாயகம் அவர்களாற் சங்க அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

திருவாளர்கள் எஸ். தொண்டமான் எம். பி; டி. இராமானுஜம் எம். பி. முதலிய இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர்களும், கம்பளை வித்தியாதரிசி திரு. சோ. நடராஜன், கண்டி முஸ்லிம் லீக் காரியதரிசி ஜனாப் ஏ. என். எம். ஹுஸைன் முதலிய பிரமுகர்களும் சொற்பொழிவு ஆற்றினார்கள். பெற்றாரின் சார்பாக திரு. எஸ். என். பொன்னையா பேசினார்.

மாணவரின் ஆடல் பாடல்கள் அமைந்த ஒரு கதம்பக் கச்சேரியும் நடைபெற்றது.

தலைமையாசிரியர் திரு. பி. கந்தையா அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## புத்தூர் மெதோடிஸ்ற் மிஷன் பாடசாலை

### பெற்றோர் தின விழா

புத்தூர் மெதொடிஸ்ற் மிஷன் பாடசாலை மண்டபத்தில் திரு. ஸி. வன்னியசிங்கம் எம். பி. அவர்கள் தலைமையில் பெற்றார் தின விழா சென்ற 16-3-51-ல் கொண்டாடப்பட்டது.

மாணவர்களால் இராமாயண சரித்திரத்தின் ஒரு பகுதியாகிய "வாலிவதம்" என்னும் நாடகம் நடித்துக் காட்டப்பட்டதுமல்லாமல் ஆடல் பாடல்களும் நடைபெற்றன.


சகல பயிர்களுக்கு

C C C பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில்
40 வருடகால அனுபவத்தின் பயனாக

நாங்கள்

C C C

கலவைப்பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசீலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி,
லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

The
Colombo
Commercial
Company,
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd

தந்தி: COSSACK. தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4246]

ஐரோப்பா யாத்திரை

✻ தமிழ்ப் புலவர்கள் பெண்ணைக் கொடிபோல்வாள் என்று வர்ணிக்கும்போது மேல் நாட்டுப் பெண்களை மனதில் வைத்திருந்தனர் போலும்.

# மேனாட்டுப்பெண்மணிகள்

## பூந்தோட்டத்திற் கண்டனமாரி!

[11-3-51 இதழின் தொடர்ச்சி]

கொழும்பிலிருந்து லண்டன் மாநகரம் செல்வதற்கிடையிற் சீதோஷ்ண நிலை அதிக மாறுதல் அடைகின்றது. இந்து சமுத்திரத்தில் வெப்பமும், மத்திய கடலில் அதிக வெப்பமும், அல்லது அதிகம் குளிர் இல்லாத மத்தியில் சீதோஷ்ண நிலையில்—வட அத்திலாந்திச் சமுத்திரத்தில் அதிக குளிரும் இருப்பதை கப்பல் பிரயாணிகள் அனுபவிக்கிறார்கள். சீதோஷண நிலைக்கு ஏற்ப பிரயாணிகள் உடுப்பை மாற்றிக் கொள்ளுகிறார்கள். ஆனால் ஐரோப்பிய பெண்களின் உடை சீதோஷ்ண நிலையைப் பொறுத்ததாக இல்லை. அவர்களுடைய மன நிலையைப் பொறுத்ததாகவே காணப்படுகிறது. ஆடவரைப் போலவே தாமும் இருக்க வேண்டும் என்பது பெண்ணின் விருப்பம். ஆடவர் காற் சட்டை அணிந்தால் தாமும் காற் சட்டை அணிவார்கள். ஆண்கள் தலைமயிரைக் கத்தரிப்பதால் தாமும் கூந்தலை கதுக்கிக் கொள்ளுகின்றார்கள். ஆண்கள் தம்மிலும் உயரமானபடியால் தாமும் குதியுயர்ந்த சப்பாத்தை அணிந்து கொள்ளுகின்றனர் போலும். ஆண்கள் 'சிகரற்' புகைத்தால் தாமும் அதே தூபம் இட்டுக் கொள்வார்கள். ஆடவர் குதிரைஏற்றம் முதலியனவற்றில் ஈடுபட்டால் தாமும் அதில் பங்கு எடுத்துக் கொள்ளுவார்கள். இவற்றால் ஒரு பாதகமும் இல்லை.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமங் கேட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே."

என்று அப்பர் சுவாமிகள் அன்றே பாடினார் அல்லவா? என்றாலும் பெண் பெண்தான். அன்று அவளைக் கொடி போல்வாள் என்று தமிழ்ப்புலவர் கூறியது அததனையும் உண்மை. கடலிலாவது தரையிலாவது எங்கேயாவது ஒரு ஐரோப்பியப் பெண்ணை ஆடவனுடன் கண்டால் இந்த உவமை நன்கு புலனாகும். ஆடவனிருக்கும் போது அவள் அவன் பக்கலிற் சாய்ந்து கொள்வாள். நடக்கும் போது தனது கையை அவனுடைய தோளிலாவது கையின் இடையேயாவது வைத்துத் தன்னை ஒருவிதமாக தொங்க விட்டுக் கொள்வாள். தமி

வழக்கறிஞர்
— அ. அருளம்பலம் —

ழ்ப்புலவர்கள் பெண்ணைக் கொடிபோல்வாள் என்று வர்ணிக்கும்போது மேல் நாட்டுப் பெண்களை மனதில் வைத்திருந்தனர் போலும்.

### நீர்விளையாட்டு

கப்பலிற் சுமார் இருபத்து நான்கு அடி நீளமும் பதினாறு அடி அகலமுமுள்ள ஓர் அழகிய தடாகம் உண்டு. தண்ணீரினுடைய ஆழத்தைக்கூட்டவும் குறைக்கவும் தக்கதாக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்றது. இத்தடாகத்தில் தினமும் ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் நீந்திவிளையாடுவார்கள். ஒரு நாள் நீர் விளையாட்டுப் பந்தயம் வைப்பதாகத் தீர்மானிக்கப் பெற்றது. கிரிமலைக்கேணியில ஒரு விளையாட்டு நடப்பதானால் எத்தனை பேர் கூடுவார்கள்? அது போலவே கப்பலிலுள்ள பன்னூற்றுக்கணக்கான மக்களும் தடாகத்தின் நாற்புறத்திலும் விளையாட்டுத் தொடங்க ஒரு மணிநேரத்திற்கு முன்னதாக வந்து சேர்ந்தார்கள். தடாகம் மேலிருந்து கப்பலின் நான்காம் மாடியில் இருக்கின்றபடியால் நான்குமாடியிலுமிருந்து தடாகத்தில் நடக்கும் வைபவங்களைப் பார்த்துக் கொள்ளலாம்.

ஒருவர் நடக்கப் போகும் சம்பவங்களை எல்லாம் கேட்கும் படியாக ஒலி பெருக்கி மூலம் ஒவ்வொன்றாக ஆரம்பத்திலேயே கூறுவார். முதலாவதாக, ஆண்களுக்கிடையே ஓர் போட்டி. தடாகத்தின் இரு கரைகளிலும் தண்ணீரின்மேல் காற்று நிரப்பப் பெற்ற றப்பர்சில்லுகள் மிதக்கின்றன. பந்தயத்தில் பங்கு பற்றுபவர்கள் தடாகத்தின் ஒரு கரையில் வரிசையாக நின்று றப்பர்ச் சில்லுகளுக்கூடாக நீந்திச்சென்று மறுகரையிலுள்ள அதேபோன்ற சில்லுக்களுக்கிடையால் நுழைந்து பின்னும் அதே பிரகாரம் திரும்பி வந்து கரையேற வேண்டும். இதேமாதிரி அடுத்த பந்தயத்தில் பெண்கள் பங்கு எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

இரண்டாவது விளையாட்டிற் பெரிய பாய்மரமொன்றைத் தடாகத்தின் மத்தியில் தண்ணீரில் முட்டாமல் நீர் மட்டத்திலிருந்து நான்கடி உயரத்தில் இரு கரையிலும் பொறுக்கும்படியாக வைப்பார்கள். கம்பத்தின் இருகரையிலுமிருந்து இருவர் தத்தித் தத்தி வந்து கம்பத்தின் மத்தியில் சந்திப்பார்கள். ஒவ்வொருவர் கையிலும் பருத்தியடைந்த தலையணை ஒன்று இருக்கும். மறுகை முதுகுக்குப் பின்னாற் கட்டப்பட்டிருக்கும், பந்தயத்திற் பங்குபற்றுபவர்கள் ஒருவரையொருவர் தலையணையால் மோதித் தண்ணீரில் வீழ்த்தவேண்டும். சிலர் அடியின்வேகத்தால் தண்ணீரில் விழுவார்கள். சிலர் மற்றவர் அடிக்க ஓங்கும்போது தலையைக் குனிய அடிக்க எத்தனித்தவர் கீழே விழுவார். இந்த விளையாட்டைப் பார்த்துச் சிரிக்காமல் இருக்க முடியுமா? மூன்றாவதாக இரு பெண்கள் தடாகத்தின் ஒரு கரையில் நீந்த முடியாதவர்கள்போல் தத்தளிப்பார்கள். இதைக்கண்ட இரு ஆடவர்கள் ஒரே சமயத்தில் மறுகரையிலிருந்து குதித்து நீந்திவந்து பெண்களைத்தாங்கி எடுத்துக்கரை சேர்ப்பார்கள். கரையேறும் சமயத்தில் வீரர்கள் இருவரும் நீர் வாதத்தினால் சோர்வுற்றுத் தத்தளிக்க உதவி பெற்ற இரு பெண்களும் புத்துயிர்பெற்றுத்தமக்குத்துணை புரிந்த இரு ஆடவரையும் நீரில் மூழ்காமல் தாங்கிச் சென்று கரை சேர்ப்பார்கள். இந்த அற்புதத்தைக கண்டு கைகொட்டாமல் இருக்கவும் முடியுமா? அடுத்ததாக நீந்துபவர்கள் எலுமிச்சம்பழம் வைக்கப்பெற்ற ஓர் கரண்டியை வாயில் கௌவிக் கொண்டு ஒரு கரையிலிருந்து மறுகரைக்கு நீந்திவந்து திரும்புவார்கள். பழத்தை நீரில் வழுவ விடாமல் முந்துபவர் பரிசு பெறுகின்றார். கடைசியாகத் தடாகத்தில் 40, 50 கரண்டிகளைப் பல இடத்திலும் எறிந்துவிடுவார்கள். எறிந்தபின்னர் ஒவ்வொருவராகத் தடாகத்தில் பலர் மூழ்கிக் கரண்டிகளை எடுத்துக் கொண்டு வெளியேறுவார்கள். எவர் அதிகமான கரண்டிகளை ஒரேமூச்சில் வெளியே எடுக்கின்றாரோ அவர் பரிசு பெறுகின்றார். பெண்களும் இந்தச் சுழியோட்டத்தில் திறமையுடன் பங்கு எடுத்துக் கொள்ளுகிறார்கள். இப்படியான உடற்பயிற்சியில் பிள்ளைகளையும் பழக்க மேல்நாட்டில் பெண்கள் அதிகம் சிரத்தை எடுக்கின்றார்கள்.

### பேச்சுச் சுதந்திரம்

இனி இங்கிலாந்தில் நடந்த சம்பவங்களைக் குறிப்பிடுகின்றேன். 24-9-50 பிற்பகல் பிரிட்டிஷ் கவுன்சிலின் பிரதிநிதி என்னைச் சந்தித்து விருந்தினர் இல்லத்துக்கு அழைத்துச் சென்றார் என்ற செய்தியை முன்னரேயே கூறினேன். விருந்தினர் இல்லத்தில் நான் தாவர போசனம் மாத்திரம் உண்பவன் என்ற விஷயத்தை அறிவித்தேன். அதற்கு ஏற்ற ஏற்பாடுகள் செய்தார்கள். சிற்றுண்டி அருந்திவிட்டுப் பொழுது அந்தமிக்கமுன் நான் இருந்த இடத்துக்கு அருகாமையில் உள்ள ஹயிட் பாக் என்று சொல்லப்படும் பூந்தோட்டத்துக்குச் சென்றேன். ஒரு பக்கத்தில் கூட்டங் கூட்டமாக நாலு ஐந்து இடங்களிற் சொற்பொழிவுகள் நடைபெற்றன. ஒரு பேச்சாளர் அரசினர் நிலக்கரி அகழ்ந்து எடுக்கும் தொழிலாளருக்குக் கொடுக்கும் சம்பளம்போதாது என்று கண்டன மாரி பொழிந்து கொண்டிருந்தார். இரண்டு பொலீசார் இவர் பேசுவதைக் கேட்டும் கேளாதவர்கள் போல் நின்றார்கள். அப்பாற் சென்றேன். மற்றொருவர் சமயப் பிரசாரம் செய்துகொண்டு இருந்தார். அவருடைய பேச்சைக் குழப்புவதற்குப் பலர் தக்கனவும் தகாதனவுமான கேள்விகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பூந்தோட்டத்தை இப்படியே ஒருசுற்றுச் சுற்றி வந்தேன். பேச்சுச் சுதந்திரம் உள்ள நாட்டில் நான் அப்போது இருந்தேன் என்பதை உணர்ந்தேன். மெது மெதுவாகக் குளிரும் இருளும் கிளம்பின. எனது விடுதிக்குத் திரும்பி வந்து இராப் போசனம் முடித்துக் கொண்டு உறங்கினேன்.

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

# கார் வழிபாடு

— சி. து. கன்னிசாமி —

வருக மழையே! நீ வையமெலா மின்பம்
பெருக வுளமுருகிப் பெய்க—திருகுமுளக்
கோட்டமெலா நீங்கிக் குவலயத்தில் மக்களெலாம்
ஈட்டமாய் வாழ விசைந்து.

பெய்க முகிலே! நின் பேரருளை யாமறவேம்
உய்கவென வெங்கட் குரையாயோ—பொய்கைமுதல்
ஏரிமடு நீர்நிலைகள் எல்லாமும் வற்றனவால்
வாராயோ நீர்சுமந்து வான்.

கன்னிப் பசுமைக் கவினூர்ந்த நாடெல்லாம்
வன்னியிற் பட்டனபோல் வாடியவே—மின்னியெழில்
வான்வெளியில் வந்தெமர்தம் வாட்டமெலாம் ஒட்டமுறச்
சூன்முகினீ பெய்க துணிந்து.

கொடைமடம் பட்டாய்நீ கொள்கையி லென்பார்
நடைமடம் பட்டாய்கொல், நல்லாய்!—இடைதெரிந்
தல்ல லகற்று மரிய குணம்போக்கிச்
செல்லே யொழிந்ததேன் செப்பு.

நீலத் திருவுருவி னேரிழையெந் தாயொக்குங்
கோலத் தியலுங் குலமுகிலே—சீலத்தி
னம்மை திருவருள்போ லாருயிர்க்கு நீயிரங்குஞ்
செம்மை மறந்ததேன் செப்பு.

கொள்ளாமோ நின்னைக் குறைதீர மெய்த்தழுவி
அள்ளிச் செழுமுத்த மாடாமோ—உள்ளஞ்
செருக்கித் திரியாமோ செல்லேயிங் குற்றால்
உறக்கருதா தென்னோ வுரை.

கனியு மியல்பதனைக் கண்ணகன்மா ஞாலம்
இனியு மறக்குங்கொ லின்பத்—தனிமழையே
தெல்லென் மழலை யொலிகொண் டிழிந்தெங்கள்
அல்ல லகற்றி யருள்.

மின்னல் மிளிர்மேனி மேவுமிடி யாலுடுக்கை
தன்னுருவாற் றண்மிடறு தான்காட்டி—முன்னோன்போல்
இன்பத் தனிக்கூத்திவ் வேழையரேம் கண்டுணரத்
துன்பகல வான்முகிலே தோன்று.

பசியா லுயிர்வருந்திப் பார்மிசையெல் லோருங்
கசியு மியல்பதனைக் கண்டும்—இசையாய்கொல்
காரே! நின் வண்மைக் கருத்தெலா மாறிவிடின்
ஆரே யெமைக்காப்ப வர்.

நெல்லருளி யெம்மை நிலைக்கச்செய் தவ்வாறே
புல்லருளி யாக்கட் புரந்திடாய்—நல்லெழிலீ!
கண்கண்ட தெய்வமாக் காணக் கருதினேம்
விண்ணின் றெழுக விசைந்து.




இலக்கிய மஞ்சரி

4-ம் 5-ம், 6-ம் புத்தகங்கள்

பாடசாலைகளில் இலக்கிய பாடமாக, நான்காம், ஐந்தாம், ஆறாம் வகுப்புகளுக்கு உபயோகிக்கக்கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளன.

விலை : 4-ம் புத்தகம் ... 50 சதம்
5-ம் ,, ... 60 ,,
6-ம் ,, ... 75 ,,

சுன்னாகம்: தனலக்ஷுமி புத்தகசாலை



# இதய ஊற்று

கசின்

அத்தியாயம் 14

## எக்கச்சக்கமான நிலை

"எண்ணம் வானில் எழுந்து பறந்திட
எண்ணி லாமனக் கோட்டைகள் கட்டினும்,
கண்ணைத் தைத்துச் சிறகைத் துணித்திட்ட
கருடன் போலச் செயலின்றி நின்றனன்;
மண்ணோர் இன்பநல் வீடென மாறவும்,
வாழ்க்கை இன்னிசைக் கீதமாய்ப் பாயவும்
பண்ண ஆவி துடிக்கின்ற தாயினும்
பாதை காணத் திறனில்லை என்செய்வேன்."

— பே. தூரன்

லலிதாம்பிகை தமது விவாகத்தைத் துரிதப்படுத்த விரும்பினாள். தான் விரைவில் விவாகஞ் செய்துகொள்வதே தனது வாழ்க்கையில் ஏற்பட்ட மந்தமான நிலைமைக்கு உடனடியான மருந்து என்று தீர்மானித்தாள்.

உலகத்தில் ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப்பிட்ட வயது இருக்கிறது. உலகத்தில் உள்ள சர்வ வியாதிகளுக்கும் குறிக்கப்பட்ட வயது இருக்கிறது என்று வைத்தியர்கள் கூறுகிறார்கள். சில வியாதிகளுக்குக் குறித்த வயது தவறாமல் இருப்பதை நாம் தினமும் காண்கிறோம். காதல் நோய்க்கும் ஒரு குறிப்பிட்ட வயது இருக்கிறது. ஏனைய நோய்களை வாத பித்த சிலேற்பனம் என்று பிரித்து, ஒவ்வொன்று சம்பந்தமான வியாதிக்கும் ஒவ்வொரு வயது கூறுவர் ஆயுள் வேத வைத்தியர். காதல் நோயையும் மேற் கண்டவாறு பிரிக்கலாம். அவரவர் தேகக் கூறுக்குத் தக்கபடி காதல் நோயின் வயதும் கூடிக்குறைந்து இருக்கும்.

குறித்த வயதுக்குள் (கால எல்லைக்குள்) காதற் கலியாணமாக முடியாவிட்டாற் காதல் நோய் மருந்தின்றித் தானே குணமடைந்துவிடும். ஒருவரை யொருவர் சிறிது சிறிதாக மறந்துவிடுவர். அல்லது சிறிது சிறிதாக ஒருவரின் குணம் ஒருவருக்குப் பிடியாமற் போய்விடும்.

லலிதாம்பிகை, மகாதேவன், தன்னை விவாகஞ்செய்ய மறுக்க மாட்டான் என்று துணிந்து கொண்டாள். இனித் தனது, மாமனாரை உத்தரவு கேட்கவேண்டியது தான் பாக்கி. மாமனாரும் சிறிதும் தடையின்றிச் சம்மதிப்பார் என்று லலிதாவுக்குத் தெரியும். அவர் லலிதாவின் வழியில் குறுக்கே நில்லாது பேர்வழியாச்சுதே. மகாதேவனும் தானுமாகச் சென்று கச்சேரியில் உடன் கலியாண எழுத்து எழுதிக்கொண்டாற் பின்னர் விசுவநாத சாஸ்திரிகளும் ஒன்றுஞ் செய்ய முடியாது. இனி என்ன செய்கிறது என்று சாந்தப் பட்டுக் கொள்வார். இது லலிதாவின் திட்டம். லலிதாவின் திட்டத்திலே தனது விவாகத்துக்குக் குறுக்கே ஒன்றும் தோற்றப் படவில்லை. முறைக்கு, மாமனாரை எழுதிக் கேட்பது ஒன்றுதான் தாமதம். என்ன இருந்த பொழுதிலும், தமது காதலில் முன்பிருந்த நிலையிலும் பார்க்க ஒரு மந்தமான நிலை இப்பொழுது இருப்பதை அவள் கண்டுகொள்ளவில்லை.

லலிதா மகாதேவனின் குண விசேஷங்களையும், அவன் வரலாற்றையும் விளக்கி, அவனை விவாகஞ்செய்ய மாமனாரிடம் உத்தரவு கேட்டாள். மாமனாரின் பதில் கிடைக்கச் சிறிது தாமதமாயிற்று. ஆனால் அது தனக்குச் சாதகமாய்வரும் என்பதில் அவளுக்குச் சந்தேகமில்லை. பதில் வந்தவுடன் விவாகப் பதிவை நடாத்திக்கொள்வதற்காக மகாதேவனிடம் முன் கூட்டியே பேசினாள். மகாதேவன் மிகுந்த சந்தோஷத்தோடு, ஏற்றுக் கொள்ளவுமில்லை. வெறுப்போடு மறுக்கவுமில்லை. 'ஆம, அதற்கென்ன' என்று அரை குறை மனதுடன் சம்மதித்தான். அவன் உற்சாகமடையாததற்கு ஒரே ஒரு பிரதான காரணமுண்டு.

இன்ஸ்பெக்ரர் தாமோதரம் லலிதா வசிக்கும் வீட்டுக்கு அடிக்கடி போவது மகாதேவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் இதை அவன் வெளியாய்ச் சொல்லவில்லை. அது சொல்லக்கூடிய விஷயமாக இருக்கவில்லையே! என்ன செய்வதென்று தனது மனதிற்குள் வைத்துப் புழுங்கினான்.

என்னதான் படித்தாலும், பெண்கள் அடக்கமாக வாழ வேண்டும்; கண்ட எல்லோருடனும் பல்லைக்காட்டிக் கொண்டு சம்பாஷித்துத் திரிவது பெண்களுக் கழகல்ல என்பது மகாதேவன் கண்ட முடிபு. என்னவந்தாலும் லலிதாவை விவாகஞ் செய்வதில்லை என்று தனக்குள் திட்டமிட்டுக்கொண்டான். ஆனால் லலிதாவுக்குமுன்னிலையில் சென்றவுடன், நேருக்கு நேர் மறுத்துப்பேச அவனால் முடிவதில்லை.

தன்னோடு நேருக்குநேர் சம்பாஷிக்கும்பொழுது, முன் போலக் குதூகலமாக மகாதேவன் காணப்படாததைச் சில சமயம் லலிதா அவதானித்த பொழுதும், அவள் அதைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. தற்காலத்தில் இலங்கை அரசினராற் கட்டுவிக்கப் படுகிற சில கட்டிடங்கள் வெடிப்புத்தாவி இடிந்து விழுவது போல, லலிதாவின் மனக் கோட்டையும் இடிந்துவிழக் தக்கதாக ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

கேணல் சுந்தரம்பிள்ளை, மகாதேவனை விவாகஞ் செய்வதை முற்றாக மறுத்துக் கடிதம் லலிதாவுக்கு எழுதியிருந்தார். காரணங்களைத் தான் இப்போது கூற விரும்பவில்லையென்றும் பின் ஒருசமயம் நேரிற் சொல்வதாகவும், வேறு எவரையேனும், விவாகஞ் செய்யத் தான் மறுக்கமாட்டேன் என்றும், மகாதேவனை மாத்திரம் விவாகஞ்செய்யத் தான் சம்மதிக்கமாட்டேன் என்றும் கண்டிப்பாக எழுதியிருந்தார்.

லலிதாவுக்குச்செய்வதின்னதென்றே தெரியவில்லை. தன்னை அன்பாக நேசித்து வளர்த்த மாமனாரின் சொல்லைத் தட்டவும் முடியவில்லை. மகாதேவனை மறக்கவும் முடியாது. நேரிற் சென்று மாமனாருடன் வாதாடிப் பார்ப்போம் என்று நினைத்தாள்.

மகாதேவனுக்கு விஷயத்தைச் சொல்லி, என்ன காரணத்தால் எனது மாமனார் மறுக்கிறார் என்று கேட்டுப் பார்க்க முதலில் லலிதா நினைத்தாள். மகாதேவன், அவளைச் சந்தித்தபொழுது, முகத்தை ஒருமாதிரி வைத்திருக்கவே, லலிதா அந்த எண்ணத்தையும் கைவிட்டாள்.

கேணல் சுந்தரப்பிள்ளை அற்பகாரணங்களுக்காகத் தமது விருப்பத்தைத் தடுத்திருக்க மாட்டார். ஏதோ நியாயமான காரணம் இருக்க வேண்டும். ஒருவேளை மகாதேவன் ஒரு ஸ்திரிலோலனாய் இருக்கக்கூடுமா? அவன் நடத்தையெல்லாம் வெறும் நடிப்பா? எந்த ஒரு ஆண்மகனும், ஒரு இளம் பெண்ணோடு இரவு முழுவதும் மனத்தை அடக்கிக்கொண்டு படுத்திருக்க முடியுமா? முற்றத் துறந்த சந்நியாசிகளாலும் முடியாதென்று சொல்லுகிறார்களே. இவ்வாறு லலிதாவின் சிந்தனைச் சுழல் சென்றது.

லலிதாவின் இதயத்தில் பிரவாகித்த காதல்ஊற்று வற்றிக் கொண்டே போனது. ஆனால் அது முற்றாக வற்றிவிடவில்லை. தூய்மையோடு தோன்றிய காதல் என்ன புறக்கா

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)


அன்புக்கு அறிகுறி

அன்பர்களுடன் தொடர்பு வைத்திருப்பதற்கு சிறந்த வழி
ஈழகேசரி

ஒரு வருடச் சந்தாப்பணத்தையும் இவ்விண்ணப்பப்பத்திரத்தையும் நிரப்பி அனுப்பிவிட்டால் ஈழகேசரி பிரதிவாரமும் உங்கள் உற்றார், உறவினர் அன்பர்களைச் சேர்ந்தடையும்.

சந்தா அதிபர்
ஈழகேசரி
சுன்னுகம்

ஐயா,

பின்வரும் பெயருக்குத் தங்கள் ஈழகேசரியை அனுப்பிவைக்கவும். இத்துடன் ஒரு வருடச் சந்தா ரூ.6/- வெள்ளி 6/- முற்பணமாக அனுப்பியுள்ளேன்.

..............................
ஒப்பம்

பெயரும் விலாசமும்:
..............................
..............................
..............................
..............................



கொழும்பில்
ஈழகேசரி
கிடைக்குமிடம்:
பேசிக் புக்ஸ்ரோல்,
99 சதாம் வீதி,
கோட்டை : கொழும்பு


## பைம்பல் உலகம்

"நரிக்கு இளக்காரங் கொடுத்தாற் கிடைக்கு இரண்டு ஆடு கேட்குமாம்" என்பதுபோலிருக்கின்றது ஒரு சில பத்திரிகைகளின் போக்கு.

## கட்சிப் பிரசாரம்

"நீருந்தானே இதைச் சகித்துக்கொண்டிருக்கின்றீர்" என்று சத்தம்போட்டுக்கொண்டு படலையைத் திறந்தார் முகத்தார்.

எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அழுக்காறும் புகைச்சலும் நிறைந்த உலகில் யார் யார் எதைச் செய்கிறார்களோ என்று அறிவதே கஷ்டமாக இருக்கிறது. எனவே, முகத்தார் எதைக் கருதினார் என்பதை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை.

"என்ன? பிறருடைய கையெழுத்துக்களைத் தவண்டையடித்து வாங்கித் தனது பிண்ணுக்குத் தனமான எண்ணங்களைப் பத்திரிகைகளுக்கு எழுதிப் பழுக்கக் காய்ச்சுபவர்களைப்பற்றிக் கூறுகின்றீரா?" என்றேன் நான்.

"பழுக்கக்காய்ச்சினால் நிறம் ஏறுமெண்டுதான் சொல்லுறார்கள். அதைவிடுங்காணும். நான் எங்கடை சுதந்திரத்தைப் பற்றி ஒரு கதை கேள்விப்பட்டேன். இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரம் வெறும் சக்கையாம். அதுதான் உம்மைக் கேட்டறியலாமெண்டு வந்தேன்."

உமக்கு இதுவிஷயம் எப்படித் தெரியும்?"

"ஆரோ சில்வா கொழும்பு நகரியிலை பேசினாராம். பேப்பரிலே வந்தால் உமக்குத் தெரியாமல் இருக்குமோ?"

"ஆமாம், இராணி அப்புக்காத்து எம். டபிள்யு. எச். டி சில்வா என்பவர் இப்போது ஒரு புதிய அரசியற் கட்சியை ஏற்படுத்தியிருக்கின்றார். ஸ்ரீ லங்காக் குடியரசுக்

### சோனுசலம்

கட்சி என்பது அக் கட்சியின் பெயர். கொழும்பில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்திலேதான் இலங்கை பெற்ற சுதந்திரத்தைப்பற்றியும் சக்கை போடு போட்டிருக்கின்றார். இலங்கைக்கு உண்மையான சுதந்திரங் கிடைத்திருக்கின்றதெனக் கூறுவது பிழையென ஸ்ரீ சில்வா முழக்குகின்றார். எங்கள் பிரதமர் சேனநாயகா இலங்கையின் பிரதமர் அல்லவாம். அவர் இங்கிலாந்து மன்னரின் பிரதமராக இலங்கையிற் பதவி வகித்து வருகின்றார் எனவும் ஸ்ரீ லங்காக் குடியரசுக் கட்சி பறைசாற்ற ஆரம்பித்திருக்கின்றது. முகத்தாரே! இன்னுமொரு விஷயமெல்லோ அம்பலமாகியிருக்கின்றது."

"அது என்ன? இது நல்ல பைம்பல்தான்; சொல்லும், சொல்லும்" என்று அவதிப்பட்டார் முகத்தார்.

"இலங்கையிலுள்ள முடிக்குரிய ஆதனங்கள் எல்லாம் இங்கிலாந்து மன்னருக்குத் தான் சேர்ந்தனவாம். இலங்கை மக்களுக்குப் பொருளாதார சுதந்திரம் இன்னுங் கிடைக்கவில்லையென்று ஸ்ரீ சில்வா புகார் செய்கின்றார்" என்றேன்.

அப்ப இந்த யு. என். பிக்காரர் ஏதோ எல்லாம் பெரிசாய்க் கதைக்கிறார்களே! அந்தச் சில்வா என்ன பறங்கியோ? சோனகமோ?"

"இல்லைக்காணும்; அவர் ஒரு அசலான சிங்களப் பிரமுகர். நல்ல பண்பாடு மிகுந்தவர். சிமையிலே இலங்கையின் பிரதம பிரதிநிதியாகவும் பதவி வகித்த பெருமை அவருக்கு இருக்கின்றது. விஷயம் அறிந்த ஒருவர் இலங்கை பெற்ற சுதந்திரம் வெறும் போலி என்று சொல்லத் தலைப்பட்டிருப்பதைக் கவனிக்கும் போது பெரிய ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது. நிற்க,

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

# பிரயாணத் தொல்லைகள்




## நகரசபை இடைத்தேர்தற் சீர்கேடு

## சிந்தனையற்ற சமூகத்தால் ஏழைகள் படும் பாடு

கொழும்பு, 23-3-51

'ஈஸ்டர்' விடுமுறை நாட்கள் ஆரம்பமாகிவிட்டன. புதன் இரவு கொழும்புகோட்டைப் புகையிரத நிலையத்தில் ஏராளமானசனங்கள் காணப்பட்டனர். யாழ்ப்பாணத்துக்கு வழக்கமாகப் புறப்படும் புகையிரதத்தைவிட வேறொரு விசேஷ புகையிரதமும் புறப்பட்டது.

இந்தமுறை 'பேர்த' என்றுசொல்லப்படும் படுக்கை வசதி பெற விரும்பினால் நேரத்தோடு அதாவது மூன்று நாளைக்கு முன்னரே 'ரிக்கெற்'றையும் வாங்கிவிட வேண்டும். தென்னிந்திய முறையை இங்கேயும் கையாண்டு பார்க்கிறார்கள். இது ஒருவழியில் நல்லதுதான். யாழ்பாணத்திலே வெப்பம் அதிகமென்று பல நண்பர்கள் தோடம்பழப் பார்சல்களுடன் காணப்பட்டனர். எத்தனை பெட்டிகளைச் சேர்த்தாலும் விடுமுறைக்காலத்தில் பிரயாணக் கஷ்டத்தை நீக்கிவிட முடியாது. பிறந்த ஊர் பிடிக்கவில்லையென்று சொல்லிச் சில தமிழர்கள் நுவரெலியாவுக்குப் பயணங்கட்டினர். சிலர் சிவனடிபாத மலைக்கு யாத்திரைசெய்ய முடிச்சுகளுடன் நின்றனர். இன்னுஞ் சிலர் வருஷப்பிறப்புச் செலவுக்கு நுவரெலியாக் குதிரைப் பந்தயத்தில் ஒருகை பார்ப்போம் என்று பல புத்தகங்களுடன் நின்றனர். எங்கள் வாழ்க்கையே ஒரு பிரயாணந்தானே. ஆகவே பல வகைப்பட்ட நோக்குடன் விடுமுறைக் காலத்தைக் கழிக்கப் பிரயாணஞ்செய்ய வந்தவர்கள் ஒரே இடத்திற் கூட வேண்டி நேரிட்டது. இவர்கள் எப்படிப் பிரயாணஞ்செய்கிறார்கள் எனப் பார்க்கச் சென்ற என்னைப் போன்றவர்கள் சிலரையும் இதிற் சேர்க்கத்தானே வேண்டும். இன்னுஞ் சிலர் தமிழ் விழா நடைபெறும்போது ஊருக்குப் போகவேண்டும் என்று சொல்லி விடுமுறைக்குப் போகாமலும் நிற்கிறார்கள்.

### நகர சபை இடைத் தேர்தல்

கொழும்பு நகரசபையிலே கிரிலப்பனை வட்டாரத்துக்கு ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பதற்கு வாக்களிப்புச் சென்றவாரம் நடைபெற்றது. இதில் கோட்டைப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. டி. பி. ஆர் குணவர்த்தன அதிகப்படியான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுவிட்டார். ஆனால் தேர்தல் நடைபெற்றபோது இவருக் கெதிராகப் போட்டியிட்ட திரு. ஜயசிங்கா பொலிசாரிடம் அநேக முறைப்பாடுகளைச் செய்தார். எவ்வளவுதான் படித்திருந்தாலும் தேர்தலின்போது சில வாக்காளர்கள் நடந்துகொள்ளும் முறையே வெறுக்கத்தக்கது. காடைத்தனத்தாலும் வெருட்டிப் பயமுறுத்துவதாலும் சனங்களை வாக்களிக்க விடாமல் வெற்றி பெறலாம் எனச் சிலர் நினைக்கிறார்கள். இதனால்தான் பெருந்தன்மை வாய்ந்த அறிஞர்கள் இவ்வித சீர்கேடான தேர்தலிற் சோய்ந்து தங்கள் சாயத்தையும் கழற்ற விரும்பாது ஒதுங்கிவிடுகிறார்கள். இதனாலேதான் பெரும்பாலும் உண்மைத் தொண்டர்கள் விலகி அமைதியான வாழ்க்கையை விரும்புகின்றனர். பாராளுமன்றம் தொடக்கம் கிராமச் சங்கம் வரை இந்தக் குறைபாடு இருக்கத்தான்செய்கிறது.

### சிறைவாசிகளுக்கு நூல் நிலையம்

சிறைகளில் வசிக்கும் கைதிகளுக்கு வாசிகசாலை வசதிகள் செய்துகொடுக்க உள் நாட்டு மந்திரி காரியாலயம் திட்டமிட்டிருக்கிறதாம். இது ஒரு பெரிய சேவை என்றுதான் சொல்லவேண்டும். ஏதோ கைபிழைபாடாக ஒருவன் ஒரு குற்றத்தைச் செய்துவிட்டதற்காக அவனைச் சமூகத்துக்கு உதவாதவன் என்ற மனப்பான்மையோடு சிறைவாசஞ்செய்யவிடக் கூடாது. அப்படிவிடுவதால் குற்றம் பெருகுமேயொழியக் குறையாது. மேலும் ஒருவன் தன் மானத்தைக் காக்கச்செய்த சிறு குற்றத்திற்காக மறியலுக்குச்சென்றால், 'அவன் மறியலிருந்தவன்' என்று எங்கள் சிந்தனையற்ற சமூகம் குறிசுட்டுவிடுகிறது. ஆனால் இவன் செய்த குற்றத்திலும் மோசமான பழிபாவங்களைச் செய்வோர் இரகசியமாகச் செய்து தப்பியும் விடுகிறார்கள். இந்த மனப்பான்மையைத்தான் ஏழை படும்பாடு என்ற பிரெஞ்சுக் கதை நன்கு எடுத்துக் காட்டினது. இது சினிமாப் படமாகவும் தயாரிக்கப்பட்டது. சமூக வாழ்க்கையில் சில வேடிக்கைக்கிடமான போலியுயர்ச்சியும் சமூகப் பொய்களும் கலந்துகிடக்கின்றன. மறியற்காரர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதில் தமிழர்கள் விசேஷமாக இங்குக்கள் மிகத் தாழ்ந்த படியில் நிற்கிறார்கள். ஒவ்வொரு தமிழனையும் ஒவ்வொரு வாரம் மறியலில் போதிக்க அனுப்பினால் அவனுக்கு அப்பொழுதாவது ஒரு உணர்ச்சி பிறக்கும் என நினைக்கிறேன்.

### பல்கலைக்கழகத்தில் விகாரை

சுதந்திர இலங்கையில் பூர்த்தியாகி வரும் பல்கலைக் கழகக் கட்டடம் இருக்கும் இடத்திற் கருகில் மாணவர்களுக்கென ஒரு விகாரையும் கட்டப்போகிறார்கள். விகாரையுடன் பிக்குகள் வசிக்கும் ஆசிரமமும் இருக்குமாம். இக் கட்டடத்துக்குப்பிரதமமந்திரி திரு. டி. எஸ். சேனநாயக அவர்களே அஸ்திவாரக் கல்லை நாட்டினார். காலஞ் சென்ற திரு. டி. ஆர். விஜயவர்த்தன 250000 ரூபா நன்கொடை அளித்திருக்கிறார். சிறந்த விகாரை யொன்று விரைவில் பல்கலைக் கழகத்துக்கருகில் காணப்படும் என்பது சந்தோஷத்துக் குரிய விஷயமே. இந்தச் சமயத்தில் இந்துக்களின் கோயில் விஷயம் என்ன நிலைமையில் இருக்கிறதென்பது தெரியவில்லை. கோயில் வேதாகமப்படி கட்டவேணுமோ அல்லது வேறு முறையில் கட்டவேணுமோ என்று மிக நுணுக்கமான ஆராய்ச்சியொன்றைச் சில இந்து நண்பர்கள் பொழுது போக்கிற்காகப் பத்திரிகையில் தாளித்தார்கள். ஆனால் இந்த நண்பர்கள் கோயில் கட்டக் காசு சேர்க்கவும் மாட்டார்கள்; சேர்க்கத் தொடங்குவோரையும் இலகுவில் சும்மாவிட மாட்டார்கள். இந்து ஆலயத்தைக் கட்டும் விஷயத்தில் இலங்கையிலுள்ள சைவ பரிபாலனச் சபைகள் எல்லாம் ஒன்று கூடி முயலவேண்டும். அசட்டையாக விருந்தால் இந்துப் பிள்ளைகள் கோயில் இல்லாமல் தலையிலே குட்டிக் கொள்ள வேண்டியே வரும்.

### கிராம வாரம்

பல அரசாங்கக் காரியாலயங்களின் உதவி ஒத்தாசையுடன் வருகிற ஏப்ரில் மாதம் 6-ந் திகதி தொடக்கம் 12-ம் திகதிவரை அகில இலங்கைக் கிராமாபிவிருத்திப் பிரசார வாரம் நடத்தக் கிராமாபி விருத்திப் பகுதி ஏற்பாடு செய்து வருகிறது. கிராமப் பகுதிகளில் வேண்டிய ஒழுங்குகளைக் கிராமாபி விருத்திச் சங்கங்கள் செய்து வருகின்றன. இம்முறை மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாட ஏற்ற ஒழுங்குகள் துரிதமாகச் செய்யப்படுகின்றன.

### தமிழ்த் திருவிழா

தமிழ்த் திருவிழா சம்பந்தமான விஷமப் பிரசாரத்தை இங்குள்ள தமிழ்த் தினசரியொன்று (வீரகேசரியல்ல) செய்து வருகின்றது. சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பிலே நடைபெற்ற கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுவிழாவின் போதும் இதே பத்திரிகை குறும்புத்தனத்தில் இறங்கிப் படுதோல்வியடைந்ததுமன்றி, ஒரு பொறுப்புள்ள தமிழ்ப் பிரதிநிதி மூலம் அப்பத்திரிகையின் ஆசிரியர் இங்கு விஜயஞ் செய்த இந்திய ஆசிரியர்களுக்கு ஏதோ இதமாகக் கூறியிருந்தார் எனவுந் தெரிய வந்தது.

### இலங்கைக் கடற்படை

இலங்கைக் கடற்படைக்கு ஆள் திரட்டும் வேலை இம்மாத இறுதியில் ஆரம்பமாகும். படையின் வெவ்வேறு வேலைகளுக்குச் சம்பள விகிதமும் வேறுபட்டிருக்குமாம். கடலோடிகளாக இருப்பவர்கள் சிலர் இதிற் சேர்ந்து கொள்ள நல்ல சந்தர்ப்பம். இதற்கு வெறும் படிப்புமட்டும் போதாது. நல்ல அநுபவம் இருந்தால் படையில் உயர்ச்சி பெறுவது எளிது. இதிற் சேருவதற்குரிய நிபந்தனைகள் மூன்று பாஷைகளிலும் வெளிவருமாம்.

## பலா, பெண்பனை

### அரசினர் கட்டுப்பாடு

பலா, ஈரப்பலா, பெண்பனை ஆகிய இம்மரங்களை வெட்டவோ அழிக்கவோ கூடாதென அரசாங்க அறிக்கை ஒன்று கூறுகின்றது. இவற்றை வீழ்த்தவோவெட்டவோ விரும்புபவர்கள் அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டும்.

## இலங்கை வானொலி

### புதிய தமிழ் நிகழ்ச்சிகள்

வருகிற 26-ந் திகதியிலிருந்து 'ரேடியோ சிலோன்' தமிழ் நிகழ்ச்சிகளில் பல புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வெகுகாலமாகத் தமிழ் நிகழ்ச்சிகளில் நாடகங்கள் குறைவாயிருந்ததைத் நிவிர்த்திக்க, தமிழ் நிகழ்ச்சி அதிகாரி இப்போது, வாரத்துக்கொருமுறை அரைமணி நேர நாடகம் ஒலிபரப்ப ஏற்பாடுகள் செய்திருக்கிறார். ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் இரவு 9 மணி முதல் 9-30 வரை நாடகம் ஒலிபரப்பப்படும்.

திருச்சி, சென்னை நிலையங்களில் 1½ மணி நேரம் பெரிய கச்சேரி நடப்பது போல, இனிமேல் வாரத்துக் கொருநாள் சனிக்கிழமைகளில் இரவு 9 மணி முதல் 10 மணி வரை சிறந்த வித்துவான்களைக் கொண்டு கச்சேரி நடைபெற இருக்கிறது. இந்த வரிசையில் முதல் கச்சேரியாக யாழ்ப்பாணம் சங்கீத பூஷணம் என். சண்முகரத்தினம் வருகிற 31-ம் திகதி இரவு பாடுகிறார்.

கிராம சஞ்சிகை என்ற கிராம நிகழ்ச்சி வாரத்தில் இரண்டு நாட்கள்—திங்களும் வியாழனும்—மாலை 6 மணி முதல் 6-45 வரை நடைபெறும். கூத்துமேடை, ஆசாரக் கோவை, கமக்காரர் நண்பன் என்று பலவிதமான அம்சங்களைக்கொண்ட இக் கதம்ப நிகழ்ச்சி கிராம நேயர்களுக்கு உபயோகமாயிருக்கும்.

ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 10 மணி முதல் 11 மணி வரை ஒரு மணி நேரம் ஒலி மஞ்சரி என்ற ஒரு புதிய நிகழ்ச்சி நடைபெற விருக்கிறது. வாத்திய கோஷ்டி, இசை, சிறு நாடகம், ஹாஸ்யம், இசைச் சித்திரம் முதலிய பல்வேறு அம்சங்கள் இந்த நிகழ்ச்சியில் காணப்படும்.

சனிக்கிழமைகளில், மாலை 6 மணிக்கு ஒரு விசேஷ இசைச் சித்திரம் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இசை நுட்பம் போன்ற பல அம்சங்களும் இதில் சேர்க்கப்படும்.

பேச்சு வரிசையில் இலக்கியம், கலை, சமூகம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் சிறந்த அறிஞர்களைக்கொண்டு பேச்சுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

புதன்கிழமை தோறும், அரைமணி நேரத்துக்கு, 'விவாத மேடை' என்று ஒரு புது நிகழ்ச்சி சேர்க்கப்பட்டிருக்கிறது. இதில், பொது ஜனங்களிடமிருந்து வரும் கேள்விகளை வைத்து, அவ்வத்துறையில் சிறந்த அறிஞர்கள் விவாதிப்பார்கள்.



வுட்வர்ட்ஸ் கிரைப் வாடர் குழந்தைக்கு கோடை இரவுகளில் நல்ல தூக்கத்தைக் கொடுக்கும்

WOODWARD'S
GRIPE WATER
keeps baby well

I-WW107-111 TAM. W. WOODWARD LTD. LONDON, ENGLAND

1930

# ஈழகேசரி

சுன்னாகம், விகிர்தி பங்குனி கூ
— காந்தி ஆண்டு 82 —
பேசக் தந்தி இல. 805

## வவனியாப் பிரதிநிதி

சுதந்திரத்தைப் பெற்றுள்ள இலங்கையிற் சுதந்திரமாக வாழ்வோர் மிகச் சிலரே. அவருள் முதலணியில் வைத்து எண்ணப்பட வேண்டியவர் நமது வவனியாப் பகுதியின் பிரதிநிதியாகும் திரு. சுந்தரலிங்கமவர்கள். ஒப்பற்ற தகுதியும் ஆற்றலும் கைவரப்பெற்ற இவர், தனித்து நின்று தொண்டாற்ற வேண்டியதைக் கண்டு நாம் கவலையடைகின்றோம். தமது கொள்கைக்கு, எண்ணங்கட்கு, வழிகட்கு மாறான விஷயங்களைக் கடைசிவரையில் எதிர்த்து நின்று சாதிப்பது இவரது இயல்பாகும். இது சீரிய ஒழுக்க முறையிற்போற்றப்படினும், உலகில் பல்திறப்பட்ட குழுவினர்க் கிடையிலே தொண்டாற்றுவோர்க்கு ஏற்றதென்பதை நாம் விரைந்து அங்கீகரிக்க வியலாது.

சிறுபான்மை வகுப்பினரது அங்கீகாரத்தையும் அனுதாபத்தையும் பெறாத சிங்கக்கொடியின் கீழ்இருக்க வியலாதென இவர் பிரதிநிதிகள் சபைக் கூட்டங்கட்குச் சமுகமளிப்பதை நிற்பாட்டிவிட்டனர். கொடி விஷயமாகச் சிங்களத் தலைவர்கள் நடந்துகொண்டது பெரிதும் ஆட்சேபத்துக்கிடமான செயலாகுமென்பதை எவரும் ஆட்சேபிக்க மாட்டார். சிறுபான்மையரது உரிமைகளைக் கோரிக்கைகளை சிறிதும் பொருட்படுத்தாது அரசியலை நடத்திச் செல்லும் முறை பெரிதும் கண்டிக்கப் படவேண்டிய விஷயந்தான். இலங்கையின் கொடியைப் பொறுத்தளவில் மாத்திரமன்று, இன்னும் பல விஷயங்களில் அப்படியே செய்கின்றனர். என்றாலும் சிங்கள மக்கட்கு நல்லறிவு வரச் செய்வதற்குத் திரு. சுந்தரலிங்கமவர்கள்மேற்கொண்ட வழி சிறந்ததென நாம் ஆமோதிக்கவியலாது.

பிரதிநிதிகள் சபைக் கூட்டங்கட்கு இவர் சமுகமளியாதுவிடின் அதிகாரத்தைப் பெற்ற அரசியற் கட்சியினர் பயப்படப்போவதில்லை. மேலும் அவர்கள் தமது ஒவ்வாத முறைகளை முன்னரிலும் வேகமாகச் செலுத்திச் செல்லக்கூடும். தனித்து ஒருவர் நின்று எதிர்ப்பதால் பெரும்பயன் எய்தப் போவதில்லை. ஒருபோது எதிர்க்கட்சியினர் அனைவருஞ் சேர்ந்து திடமாக எதிர்ப்பின் நன்மை யடையவிடமுண்டு. சிங்கக்கொடியில் ஏற்படுத்தும்படி தமிழர் கேட்ட சிறிய மாற்றத்தைக் கூட அங்கீகரிக்க அரசினர் விரும்பவில்லை. மற்றைய தமிழ்ப் பிரதிநிதிகள் இவ் விஷயத்தில் அரசினருடன் சேர்ந்து நிற்கத் திரு. சுந்தரலிங்கம் மாத்திரம் தனித்து நின்று வாதாடுவதுதான் பரிதாபமாகின்றது. "தமிழன் என்று சொல்லடா" என வீர முழக்கஞ் செய்த தமிழ்த் தலைவர்கள் வாலை யடக்கிச் சிங்களத் தலைவர்களின் காலிடையிற் பதுங்கத் திரு. சுந்தரலிங்கமவர்கள் தனித்துநின்று செய்வது யாது?

வவனியாப்பகுதி மக்கள் திரு. சுந்தரலிங்கமவர்களைக் கைவிடப்போவதில்லை. இப் பகுதி ஸ்தானம் காலியானாலும் மறுபடியும் இவரே தெரியப்படுபவர். மறுபடியும் இவர் அந்தப் பகுதிப் பிரதிநிதியாகப் பிரதிநிதிகள் சபை நடபடிக்கையிற் பங்குபற்ற மறுக்கலாம். அப்படியாயின் இந்தச் சிக்கல் நீங்குவதெப்படி? அரசினர் இந்தத் திருவிளையாடல்களைப் பார்த்து மகிழ்ச்சியடையலாம். வவனியாப் பகுதிப் பொதுமக்களே நட்டமடைபவர். ஆகவே திரு. சுந்தரலிங்கமவர்கள் கொடி விஷயமாக ஏற்பட்ட வில்லங்கத்தை நீக்க வேறு வழி காண்பதே முறையாகும். தனியாகநின்று இவ்விஷயத்தைச் செய்து முடிப்பது இயன்றதொன்றன்று. தமிழர் கொடி விஷயத்தில் அபிப்பிராய பேதமடைய, முஸ்லீம்கள் சிங்களருடன் ஒத்து மாரடிக்கின்றனர். எவ்வித நிரந்தரமான நிலைப்பேற்றினையுமில்லாத இவர்கள் சிங்களத் தலைவர்களைத் திருப்தி செய்து இன்பமாக வாழவெண்ணலாம். தமிழர் நிலை அப்படியன்று. எனவே, வவனியாப் பிரதிநிதி ஆழ்ந்து யோசித்து ஆராய்ந்து நாட்டுக்கும் தமது சாகியத்தவர்க்கும் உறுதிபயக்கும்வழியை மேற்கொள்வார் என எதிர்பார்க்கின்றோம்.

## வாய்க்கால் ஊழல்

சுன்னாகம் கிராமாபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அக் கூட்டத்திற் பிரதானமாக விவாதிக்கப்பட்ட விஷயம் சந்தையிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் தெருக்கரைவழியாகச்செல்லும் வாய்க்காலைப்பற்றியதேயாகும். அவ் வாய்க்கால் துர்நாற்றம் வீசும் அழுக்குநீர்த் தேக்கமாகவே காட்சி கொடுக்கின்றது. அயலிற் குடியிருப்போர் இதன்பேறாக அடையுந் துயருக்கும் கஷ்டத்துக்கு மெல்லையில்லை. இந்த வாய்க்காலைக் குறித்துச் சென்ற வார இதழில் வெளியான விஷயத்தை நேயர்கள் பார்த்திருக்கலாம். மக்களின் ஆரோக்கியத்துக்கு மிக்க பங்கத்தை யுண்டாக்கும் இந்த வாய்க்கால் நீரை, வழிகாட்டி எட்டத்திலுள்ள குளங்கட்கு அல்லது கூபத்துக்கு ஓடச்செய்வது அரசினர் கடமையாகும். கிராமாபிவிருத்திச் சங்கத்தினர் இத் தீமையை விரைந்து நீக்க உடனே முயற்சிக்க வேண்டும். இதை தமது முதற் கடமையாக எண்ண வேண்டும். சென்ற மூன்று வருடகாலமாக இந்த ஊழல் இருந்து வருகின்றதே. இத் தெரு வீதிவழியே செல்பவர்களடைந்து வரும் இன்னல்கள் இம்மட்டல்ல. இந்நிலையில், அயலில் நிரந்தரமாகக் குடிவாழ்வோர் நிலை சொல்லவும் வேண்டுமா? எனவே கிராமச்சங்கத்தினர் அரசினர் உதவியுடன் இந்தக் கொடுமையை நீக்க விரைந்து உழைப்பது மிக மிக அவசியமாகும்.

# பாதை ஓரத்தில்

### பாட்டைசாரி

ஒருவரின் மீசையைப் பார்த்து அவருடைய பண்பாட்டை அறிந்து கொள்ளலாமென்று நகைச் சுவைக்காக இங்கு எழுதவில்லை. மீசையின் மான்மியத்தைப் பற்றிப் புராணங்களிலும் தமிழ் பேசும் படங்களிலும் அறிந்து வருகின்றோம். இராவணனை எண்ணும் போது எந்தக் குழந்தையும் அவனை மீசைகளில்லாத ஆண்பிள்ளையாக எண்ணவே மாட்டாது.

இந்த மீசையானது உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது போல இன்று மிகவும் நலிவடையலாயிற்று.

சமீபத்திற் சாவகச்சேரிப் பிரதிநிதி கூட மீசையுள்ள வாலிபர்களைக் கண்டால் தமக்குக் கட்டோடு பிடிக்காதெனக் கூறியிருந்தார்.

இதை அறிந்த பின்னர் தானோ என்னவோ, பம்பாயிலுள்ள நகரசபை அங்கத்தவர்களில் ஒருவரான பெண் மணிக்கும் மீசை விஷயம் மிகுந்த அருவருப்பை உண்டாகிவிட்டது. அவரது சகாக்களில்ஒருவர்(மீசையுள்ள ஆண்பிள்ளை) ஏதோ ஒரு விஷயத்தை அழுத்திப் பேசுவதற்காக மீசையிற் கைபோட்டு ஒரு முறுக்கு முறுக்கினாராம். இவ் வீரச் செயலை அப் பெண்மணி வன்மையாக ஆட்சேபித்தார் என அறியக் கிடக்கின்றது. ஆசை வெட்கமறியாதது போல மீசையும் ஆழ நீளமறிய மாட்டாது!

### பரஸ்பரக்கூட்டுறவு

ஆழந் தெரியாது காலை வைத்துவிட்டு அவஸ்தைப் படும் பிரகிருதிகள் படித்தவர்களிலும் இருக்கின்றனர்; பாமரர்களிலும் இருக்கின்றனர். இலங்கை இந்தியாவுடன் சருவுமாயின் அது ஆழந்தெரியாமற் காலை வைப்பதைப் போலத்தானிருக்கும். இது விஷயமாக இந்தியப் பத்திரிகை ஒன்று எழுதியிருப்பதைக் கவனியுங்கள்.

புதிதாக இந்தியர் குடியேறுவதற்கு இலங்கை அரசாங்கம் என்ன நிபந்தனை வேண்டுமானாலும் விதித்துக் கொள்ளட்டும். ஆனால் ஏற்கனவே அங்கு உள்ளவர்களில் இலங்கையராய் வாழ விரும்புகிறவர்களைப் பிரசைகளாக்கிக் கொள்வதுதான் நம்மிரு நாடுகளுக்கு மிடையே நிலையான நல்லுறவைச் சாத்தியமாக்கும். பிரிட்டிஷ் பாதுகாப்பையோ தயவையோ நம்பி, இந்தியாவைப் பகைத்துக் கொள்ளும் மடமை இலங்கை யரசினருக்கு இராதென்று நினைக்கின்றோம். ஓர் உலக நெருக்கடி வருகையில் இந்தியாவேறு இலங்கைவேறு என்ற நிலைமை இருக்க முடியாது. இதைப்பற்றி அத்தீவின் தலைவர்கள் சிந்தித்துப் பார்த்ததாகத் தெரியவில்லை.

### அந்த அடிகள்!

சிந்தியாது எழுதிவிட்டு வாசகர்களின் சிரிப்புக்கு ஆளாகிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் பத்திரிகைக்காரர்களுக்கு ஏற்படுவதுண்டு.

சென்றவாரம் இங்கு எழுதும்போது புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் அவர்களின் அடிகளை மேதை புதுமைப் பித்தன் அவர்களின் அடிகள் எனக் குறிப்பிட்டிருந்தேன். மறுதினம் கொழும்பிலுள்ள நண்பர் திரு. குருசுவாமி அவர்கள் அப்பிழையை எடுத்துக் காட்டியிருந்தார். இலக்கிய நண்பர்கள் வாசித்தின்புறும் பத்திரிகையிற் பிழைகள் நுழைந்து விட்டால் அதைச் சமாளித்துக் கொள்வது அவ்வளவு இலேசான காரியமல்ல.

### பாலோ பால்

பால் இல்லாமல் நாட்டின் பல பாகங்களிலுமுள்ளவர்கள் கஷ்டப்படுகின்றனர். மட்டக்களப்புப் பட்டினத்திலேயே பால் அருமையாகிவிட்டதாம் இந்த அழகில் பொலனறுவையிலுள்ள அரசாங்கப் பாற் பண்ணையில் நாளாந்தம் நூற்றுக்கணக்கான போத்தல் பால் வீணாகின்றதென அறிகின்றேன்.

அந்நிய நாடுகளிலிருந்து புட்டிப்பாலை அதிக பணங் கொடுத்து வாங்கி! பள்ளிக்கூடத்திலுள்ள பிள்ளைகளுக்குப் புண்ணியதானம் செய்யும் எங்கள் அரசாங்கம் பாற் பண்ணையிலே தேடுவாரற்றுக் கிடக்கும் பாலைப் பயன்படுத்திக் கொள்ள மார்க்கமின்றித் தவிக்கின்றது. அரசியல் மந்திரவாதி சேர் ஒலிவர் பால் விஷயத்தில் ஏதும் சுவையான யோசனை கூறுவாரோ, என்னவோ?

### கிராமக் கூத்து

சென்ற வியாழக்கிழமை பிற்பகல் ஸ்ரீ கே. இராஜகோபால் அவர்கள் கொழும்பு வானொலியிற் "கிழக்கிலங்கையிற் கிராமக் கூத்து" என்னும் பொருள்பற்றி அழகாகப் பேசினார். இடையிடையே சில இனிமையான பாடல்களையும் உணர்ச்சியுடன் பாடியிருந்தார்.

## தமிழ்த் திருவிழா

### ஈழநாட்டுத் தமிழன்பர்களுக்கு ஒரு விண்ணப்பம்

அன்புடையீர்!

யாழ்ப்பாணத்தில் இவ்வாண்டு ஏப்பிரில் மாசக் கடைசியில் நான்காவது தமிழ் விழா நடைபெற விருப்பதைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். இவ் விழா இனிது நடைபெறுவதற்குத் தங்களாலான பண உதவி செய்யுமாறு எல்லாத் தமிழன்பர்களையும் கேட்டுக் கொள்ளுகின்றோம். பணவுதவிசெய்யவிருக்கும் எல்லா அன்பர்களையும் நேரிற்சந்திக்கமுடியாமலிருப்பதால் பத்திரிகைவாயிலாக இவ் விண்ணப்பத்தை வெளியிடுகின்றோம். பணம் அனுப்புவோருக்குப் பற்றுச்சீட்டுஉடனே அனுப்பப்படும். இங்ஙனம்

ச. அம்பிகைபாகன்
துணைத் தனாதிகாரி
தமிழ் விழா நிர்வாக சபை
மணிமனை,
மல்லாகம்.

## பாலும் தண்ணீரும்

### ஒரு புது உபாயம்

பங்களூரிலுள்ள இந்திய பாற்பண்ணை ஆராய்ச்சி நிலையம் பாலிலே தண்ணீர் கலப்பதைக் கண்டறிதற்கு ஒரு புது உபாயத்தைக் கண்டு பிடித்துள்ளது. பால் குளிர்ந்து கட்டியாக மாறும் உஷ்ண நிலையைக் கொண்டு தண்ணீர் சேர்ந்திருப்பதை நிதானித்து விடலாம். மிகக் குறைந்த அளவில் (4 சத விகிதம்) தண்ணீர் சேர்ந்திருந்தாலும் இது காட்டிக் கொடுத்துவிடும்.

## நகரசபை நிர்வாகம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றைத் தமிழிலும் எழுதுமாறும் இச்சபையினர் கேட்டுள்ளனர். ஆங்கிலமுஞ் சிங்களமுந் தெரியாத பல தமிழ் மக்கள் கொழும்பில் இருப்பதால் அவர்கள் வழி திசை தெரியாமல் அவதியுறாதிருப்பதற்காகத் தமிழிலும் பெயர் விபரங்களைப் பொறிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யூனியன் கல்லூரி

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா சென்ற வெள்ளிக்கிழமை (16-3-51) பிற்பகல் தற்காலக் கல்வி மந்திரி கே. கனகரத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

திரு. கனகரத்தினம் அவர்கள் பேசும்போது புதிய கல்வித் திட்டமானது சகலருக்குஞ் சம சந்தர்ப்பத்தை யளிக்குமெனக் குறிப்பிட்டிருந்தார்.

### மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த விருந்து வைபவம் சென்ற சனிக்கிழமை நடைபெற்றது. சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் பிரதம அதிதியாக விருந்திற் பங்குபற்றிப் பேசும் போது மிஷனரிமாரின் சேவைகளைப் பாராட்டியிருந்தார்.

நியாயவாதி ஏ. சம்பந்தன், திரு. ஈ. ஈ. தம்பர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் திரு. ஸி. சுப்பிரமணியம், திரு. வி. எம். சூசைப்பிள்ளை, திரு. பாலசந்திரன் (டி. ஆர். ஓ.) ஆகியோரும் பேசினர்.

### சங்கிலிதோப்பு

யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள சங்கிலித் தோப்பில் புதை பொருள் ஆராய்ச்சி வேலை இம்மாதம் 6-ந் திகதி ஆரம்பமாயிற்று. இங்கு யமுனாரிக் குளத்தைச் சுத்தமாக்கும் வேலையும் நடைபெற்று வருகின்றது. சங்கிலித் தோப்புக்குக் கிழக்கே சட்டநாதர் ஆலயம் உள்ளது. இது 200 வருடங்களுக்கு முன்னர் நிறுவப்பட்டது. இங்கு கார்த்திகேயர் தெய்வயானையம்மன், வள்ளியம்மன், தட்சிணாமூர்த்தி, கஜலட்சுமி, சனீஸ்வரன் ஆகியாம் கருங்கல் விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கஜலட்சுமியின் உருவம் கவின்பெற அமைந்துள்ளது. இது சமீபகாலத்திற்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணக் கல்லூரி

### தலைவருக்குத் தேநீர் விருந்து

யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர்களாற் சென்ற செவ்வாய்க்கிழமை பிற்பகல் வண. சிட்னி பங்கர் அவர்களுக்கும், அவர்கள் பாரியாருக்கும் கொழும்பில் ஒருதேநீர் விருந்தளிக்கப்பட்டது. இவர்கள் லீவில் அமெரிக்கா செல்கின்றனர்.

பழைய மாணவர் சங்கச் சார்பில் திருவாளர்கள். கே. கனகரத்தினம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், எஸ். இராசநாயகம், குமாரி லீலா பொன்னம்பலம் ஆகியவர்கள் பேசினர்,

❁ டில்லியிற் கூடவிருக்கும் மகாநாடு பலவழியிலும் பெரு நன்மையைக் கூட்டிவைக்குமென்றே கூறவேண்டும்.

# கோணல் மூளைகள் வேலை

## பிரான்சியர் பொறுப்பற்றபோக்கு

யாருக்குப் புத்திவந்தாலும், போத்துக்கேயர் மூளை கோணலாகவே சென்றுகொண்டிருக்கின்றது. இந்தியாவிலே தமக்குச் சொந்தமான கோவா முதலிய சிறு நிலப்பாகங்களைக் கைவிடுவதென்றால் அவர்களுக்கு உயிர்போவதுபோல் இருக்கின்றது. இதுவரையும் கோவா போத்துக்கேயரின் குடியேற்ற நாடென வழங்கப்பட்டு வந்தது. இப்போது அதனை மாற்றிப் போத்துக்கேயரின் மாகாணமென்று பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது. பெயர் மாற்றினவுடன் இந்திய அரசினர் கோவாவினை இந்தியாவுடன் இணைக்கும் பிரேரணையைக் கைவிடுவாரென்று போத்துக்கேய அரசினர் நினைக்கின்றனர். கோவாப் பிரதேச மக்கள் இந்தியர். அவர்கள் மொழி, நாகரிகம், கலாசாரம், பழக்க வழக்கம் என்பன இந்தியாவுடன் தொடர்புடையன. எனவே அத்தேசத்தவர் இந்தியாவுடன் சேரவிரும்புவதை இவர்கள் தடுப்பது எப்படி முறையாகும். பேரை மாற்றினால் யாவரும் மறந்துவிடுவாரா?

### பிரான்சியரின் குறும்பு

சனசம்மதப்படி செய்வதே தமது நோக்கமென எடுத்துரைத்த பிரான்சியர் இப்போது காலைப் பின்னே வைக்கின்றனர். புதுச்சேரி, காரைக்கால், மாஹி முதலிய இடங்களில் வசிக்கும் மக்களின் எண்ணங்களை அறிய இதுவரையும் ஏதாவது எத்தனஞ் செய்தாரில்லை. சனசம்மதம் அறியப்படின் சந்திரநாகூரில் நடந்து முடிந்ததுபோல் அவ்வவ்விடங்களில் வசிக்கும் இந்தியர் இந்தியாவுடன் சேரவே நிச்சயமாக வாக்களிப்பர். இதனை யூகித்து அறிந்த பிரான்ஸ் அரசினர் சனசம்மத விஷயமாக அக்கறை கொள்வதாகக் காணவில்லை. இவர்கள் இந்தப் பிரான்சிய குடியேற்ற நாடுகட்குச்சுயராட்சியம்வழங்கப் போகின்றாராம். பொதுப்பாட்சி யென்று ஒன்றை வழங்கிவிட்டு இப்பிரதேசங்களை மேன்மேலும் தங்கள் பொறுப்பில் வைத்துக்கொள்ளப் பார்க்கின்றனர். இந்த உபாயத்தை இந்திய மக்கள் அறியாரென எண்ணுகின்றனர்போலும்.

### கலாசார மகாநாடு

கலாசார மகாநாடு அடுத்த புதன்கிழமை புது டில்லியிற் கூடுகின்றது. இந்தியாவின் பல மாகாணத்தினின்றும் பிரதிநிதிகள் இதிற் பங்குபற்றுவர். உலகின்வேறுபாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் பலர் எதிர்பார்க்கப்படுகின்றனர். ஏறக்குறைய 70நாட்டுப் பிரதிநிதிகள் விஜயம் செய்வார்கள். இலக்கியம், நுண்கலை, கல்வி, கலாச்சாரம் போன்ற விஷயமாக எவரும் தமது எண்ணத்தை எடுத்துங் கூறும் சுதந்திரம் இருக்கவேண்டும். உண்மையான கலாசாரம் விருத்தியடைய வேண்டில் இவ்விஷயமாகக் கட்டுப்பாடுகள் அரசினர் கொண்டுவருவது முறையன்று. ருஷியாவிற் கூட நினைத்தபடி எவரும் கூறவியலாது. அரசினர் கொள்கைகளை ஆதரிக்காதவர் வாய்மூட வேண்டியதுதான். கூர்த்த விவேகமும் மனோ சக்தியும் வாய்ந்த பேரறிஞர்கள் தமது எண்ணங்களை உரைக்கும் சுதந்திரம் இடையாத நாடு சிறைச்சாலை யென்றே கொள்ளப்பட வேண்டும். எனவே டில்லியிற் கூடவிருக்கும் மகாநாடு பலவழியிலும் பெருநன்மையைக் கூட்டிவைக்குமென்றே கூறவேண்டும்.

### காஷ்மீர் பிணக்கு

காஷ்மீர் விஷயமாக ஐக்கிய நாடுகள் சங்கத்திற் சமர்ப்பிக்கப்பட்ட அமெரிக்க—பிரிட்டிஷ் பிரேரணை இந்தியா பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் உதவாதெனத் தள்ளிவிட்டன. இந்தியா முற்றாக அதனை ஏற்கவில்லை. பாகிஸ்தான் சில திருத்தஞ் செய்தாலன்றி ஏற்கமுடியாதெனக் கூறிவிட்டது. இப்போது புதிய பிரேரணைகள் கொண்டுவரலாமோ வென்று ஆலோசிக்கப்படுகின்றது. இவைகள் அங்கீகரிக்கப்படுவதும் சந்தேகந்தான். பாகிஸ்தான் பழையபடி படையெடுக்க எத்தனஞ் செய்யின் அதற்கு இந்திய அரசினர் ஆயத்தமென்கின்றனர். காஷ்மீர் தாக்கப்படின் இந்தியா தாக்கப்பட்டதாகவே கருதப்படுமெனப் பண்டிதர் நேரு கூறினர்.

## இந்தியா

### புதிய கட்சிகள்

இதுவரையும் காங்கிரஸ் கட்சியே இந்தியாவில் ஆதிக்கம் பெற்றுவந்தது. மகாத்மா போன்ற சுயநலமற்ற தலைவர்கள் இதனை மகத்தான நிலையை அடையச் செய்தனர். இப்போது இக்கட்சி வலிமை குன்றுவது வருந்தத்தக்கது. காங்கிரஸ் கட்சியில் இருந்துகொண்டு அடாத செயல்களைச் செய்யின் அக்கட்சி கீழுக்குப் போவதன்றி மேலுக்குப் போவதெப்படி? இப்போது எத்தனையோ புதிய கட்சிகள் தோன்றிவிட்டன. காங்கிரஸ் கட்சியிலே பல பேதங்கள் ஏற்பட்டுவிட்டன. ஆசாரியர் கிருபளானியின் தலைமையிற் சனநாயகக் கட்சியொன்று தோன்றிவிட்டது. அத்துடன் ஜயப்பிரகாச நாராயணன் தலைமையில் ஸோஷலிஸ்ட் கட்சி நிலைபெறுகின்றது. இக்கட்சிகள் வலுவடைந்து வரின் காங்கிரஸ் கட்சி ஒருபோது அடுத்த தேர்தலில்வலிமையை இழக்கக் கூடும். அடுத்தவருடம் முடிய முன்னர் தேர்தல் ஏற்படும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 6663.

யாழ்ப்பாணம் காரைநகர்,

1. வேலுப்பிள்ளை சண்முகம்
2. பெண் சரஸ்வதி

வழக்காளிகள்

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை,

1. கே. சண்முகம் மைம் பெண் செல்லத்தங்கச்சி
2. சண்முகம் இராசநாயகம்.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 6663-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1951-ம் ஆண்டு ஏப்ரல் (சித்திரை) மாதம் 13-ந் திகதி (13-4-51) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கபபடும்.

**தீர்வைத்தொகை:**—முதல் வட்டி ரூபாய் 2266-66-ம், இதில் ரூபாய் 2000/-க்கு 27-5-50-ந் திகதி தொடக்கம் 14-7-50-ந் திகதிவரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 196–70 சதம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய்க் கோவிற்பற்று ஆனைக்கோட்டையிறை "அத்திகளி" நிலப்பரப்பு 21. இதில் அரைவாசிக்கு 30 வருஷங்களுக்கு மேற்பட்ட ஆட்சிப்படி தெற்குப்பக்கமாக நிந்தமாக நிலப்பரப்பு பத்தரை $(10\frac{1}{2})$-ம் வீடுகளும் குசினியும் முழுக்காணியின் வடகிழக்கு எல்லையில் இருக்கும் கிணற்றிற் பங்கும் வழி வாய்க்கால் உரித்தும். எல்லை: கிழக்கு, செல்லையா சின்னத்தம்பி பெண் கண்மணிக்கும் கந்தையா பெண் தங்கத்தின் உரிமைக்காரருக்குமுரிய ஆதனங்களும் கைஒழுங்கை முகப்பும். வடக்கு, நாகநாதர் சின்னத்துரைக்கும் நாகநாதர் செல்லையாவுக்கும் சிதம்பரப்பிள்ளை கயிலாசபிள்ளை பெண் மகேஸ்வரிக்குமுரிய ஆதனம். மேற்கு, சிதம்பரநாதன் பெண் ஆச்சிமுத்துவின் ஆதனம். தெற்கு, செல்லையா பெண் நாகம்மாவுக்கும் சிதம்பரநாதன் பெண் ஆச்சிமுத்துவுக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

முற்பதிவு முழு ஆதனத்திலும் சொரியலாக E. $\frac{237}{222}$.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை

Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை,

28-2-51 [4268]

## ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்தி

### மட்டக்களப்பு விழா

மட்டக்களப்பு விவேகாநந்த மண்டபத்தில், சென்ற ஞாயிற்றுக்கிழமை பகவான் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸ தேவருடைய 116-வது பிறந்த தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலை 10-மணியிலிருந்து குருபூசை ஆரம்பமாயிற்று.

இவ் விழாச் சம்பந்தமான பகிரங்கக் கூட்டம் மாலை 6.30 மணிக்கு அரசாங்கக் காரியதரிசி திருவாளர் வி. நல்லையா அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. ஸ்ரீ. கே. இராமச்சந்திரன், வித்துவான் பெரியதம்பிப்பிள்ளை, அருணாசல தேசிகர், செல்வன் லோறென்ஸ் முதலியோர் ஸ்ரீராம கிருஷ்ணருடைய வாழ்க்கையையும் அவருடைய போதனைகளையும் பற்றிய சிறந்த சொற்பொழிவுகளை ஆற்றினர். தலைவர் தம்முரையில் ஸ்ரீராம கிருஷ்ணருக்கு நாம் எவ்வாறு கடமைப்பட்டிருக்கின்றோம் என்பதையும் அவருடைய பிறந்த தினவிழாவை நாம் கொண்டாட வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்திக் கூறினர்.

## கதைகள்

[பரணி]

எமது அருமைத் தமிழ் மொழியிற் பல இலக்கியச் செல்வங்களிருக்கின்றன. அவற்றுடன் இன்னும் பல செல்வங்கள் புதிது புதிதாகப் பிறந்து நந்தமிழ்மொழியை வளஞ் செய்து வருகின்றன. இவ்விதம் வானுற ஓங்கி வளரும் தமிழ்மொழியிலே கதைகள், நாவல்கள் ஆகியவை ஒரு மகத்தான ஸ்தானத்தைப் பெற்றுள்ளன.

'கதை' என்றாலே அலட்சியமாய் நினைப்போர் பலர் இருக்கிறார்கள். கதைகளின் தன்மையைப் பற்றி அவர்கள் விளங்கிக்கொள்ளாததே இந்த அலட்சியத்தின்காரணமாகும்.

இன்று தமிழ் நாட்டில் எத்தகைய அறிஞர்கள்? அதிகம் கவிஞர்களா, கட்டுரையாளர்களா, கதாசிரியர்களா? சந்தேகமில்லை; கதாசிரியர்கள் தாம். புதிதாக வெளிவரும் புத்தகம் ஒன்றை எடுத்துப் பாருங்கள்; அனேகமாக அது கதைப் புத்தகமாகத்தான் இருக்கும். பத்திரிகைகளைப் புரட்டிப் பாருங்கள்; நாலு கதைகளாவது இருக்கும்.

கதாசிரியன் பல சம்பவங்களைப் பார்க்கிறான். துயரப்படுவோர்க்கு இரங்குகிறான். தீமைகளெல்லாம் தன் சமூகத்தை விட்டு நீங்கவேண்டுமென்று விரும்புகிறான். அவன் காணும் பல்வேறு சம்பவங்கள் அவன் உணர்ச்சி ஓட்டத்துடன் சேர்ந்து கதை உருவம் பெற்று விடுகின்றன.

கதைகள் அலட்சியப் படுத்தக் கூடியவையல்ல. இராமாயணம், பாரதம் போன்றவையெல்லாம் வெறும் சரித்திரத்தை மட்டும் கூறுவதுடன் நிற்கவில்லை. கற்பனை வர்ணனையலங்காரங்களுடன் அழகிய கதைகளாகத் திகழ்கின்றன. சிவ பக்தர்களின் செல்வமாகிய பெரிய புராணத்தில் எத்தனையோ தெய்வீக உண்மைகளை விளக்கும் சிறுகதைகள் உள்ளன. தன்னிகரில்லாத உபநிஷதங்களும் கதைகளாகவே ஆரம்பித்து நீதியைப் புகட்டுகின்றனர். நாடக உருவிலும் பல கதைகள் உள்ளன.

எந்தக் கதையை எடுத்தாலும் தற்காலத்திய கதைகள் உட்பட ஏதாவதொரு நீதியைப் புலப்படுத்துவனவாகவே இருக்கும். பொறாமையின் அழிவு, காதலின் உயர்வு, தியாகம்போன்றன கதைகளின் ஒரு சில இலட்சியங்களாகும்.

ஒரு விஷயத்தை, ஒரு நீதியை, ஒருவர் உள்ளத்திற் பதிய வைக்கவேண்டுமானால் நல்ல கதைகளே அதற்குச் சிறந்தவழி. மற்றவழிகளால் இவ்வளவு தூரம் வெற்றியடைய முடியாது. கதைகளில், 'சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுப்பது, 'நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம்' கொடுப்பது ஆகிய இரு தன்மைகள் உண்டு. சிந்தனைக்கதைகள் உயர்தரமாகவும், சாகாவரம் பெற்றனவாகவுமிருக்கும். அவற்றால் அதிக நன்மையுமுண்டு.

எந்த உயர்வான காரியத்திலும் பல குப்பைகள் சேர்ந்துவிடுகின்றன. வாழ்க்கையின் உண்மைக்கதை என்று கூறிக்கொண்டு சிலர் ஆபாசத்தில் இறங்கிவிடுகின்றனர். அது நமது துர்ப்பாக்கியம்.

பழைய காலத்திலே தமிழ் வசன நடை எளிய நடையில் அமையவில்லை. கவிதைக்கே முதல் ஸ்தானம் கொடுக்கப்பட்டு வந்தது. அதனாற்றான், நம் முன்னோர் தாம் இயற்றிய கதைகளைக் கவிதையாய்ப் பாடி வைத்தனர். வசனநடை வளம் பெற்றுவரும் இக்காலத்தில் நாம் நல்ல வசனத்திற் கதைகளை அமைப்போம். அப்போதுதான் அதை எல்லாரும் படித்துப் பயனடையமுடியும்.

இவற்றை யறியாது, தமிழர்களுக்குக் கதை யெழுதும் சக்தியே இருந்ததென்றும், அதை மேனாட்டினர் தான் முதலிற் கண்டுபிடித்தனரென்றும் சிலர் சொல்கிறார்களே. இது அறியாமையேயாகும்.

வளரும் சிறுகதை இலக்கியத்தை நாமும் வளம்படுத்துவோமாக!



சமீபத்தில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்த நியூஸிலந்துப் பிரதமர் ஸிட்னி ஜி. ஹொலண்ட், ஜனாதிபதி ட்ருமன் அவர்களைச் சந்தித்து, நியூஸிலந்து அமெரிக்காவுடன் பக்கபலமாக நிற்குமென வாக்களித்தார். நடுவணதாக நிற்பவர் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் அக்ஸன்.




**சரசாங்கி:** ஆசிரியர்: திருவெவ்வுளூர்; தி - இரா - சலசலோசன செட்டியார் எம். ஏ., பிரசுரம்: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை 1. விலை: மலிவுப்பதிப்பு ரூபா 2-8-0. உயரிய பதிப்பு ரூபா 3-4-0.

உலக மஹாகவியாகிய ஷேக்ஸ்பீயர் இயற்றிய சிம்பலின் எனும் நாடகத்தைத் தழுவி அரை நூற்றுண்டுக்கு முன்னர் வெளிவந்த இந்த நாடக நூல், இப்பொழுது இரண்டாம் பதிப்பாக வெளிவந்திருக்கிறது.

சமஸ்கிருதகவி காளிதாசர் அவர்கள் ஸ்தாபித்திருக்கும் மரபைப் பின்பற்றி வசனமும் பாட்டும் கலந்த நடையில் நூலை ஆக்கியிருக்கிருர் ஆசிரியர். உணர்ச்சி மீறிப் பாயும் சந்தர்ப்பங்களிற் பாத்திரங்களின் உள்ளக் கிளர்ச்சி பாட்டாய் வெளிவருவது இயற்கையே. இந்த நாடகத்தில் வரும் உறுப்பினர் சில சமயங்களில் அறிவுக்கு மிஞ்சிப் பாடித் தீர்த்துவிடுகிருர்கள். இங்கே நாம் காணும் பாட்டுக்கள் கவிதைப் பண்புடன் வேகமும் சரளமும் உடையன. இதில் ஐயமில்லை. ஆனுல் வரையறையில்லாத பாட்டும், வசனமும் அதன் நாடகத் தன்மையையும் வேகத்தையும் குறைத்துவிடுகின்றன. போர்க்களக்காட்சியில் மாத்திரம் சம்பவங்கள் துரிதம் பெற்று வேககதி பெற்றிருக்கின்றன.

இந்தநூல் எழுதப்பட்டு 50 ஆண்டுகளாகின்றன. இப்பொழுதெல்லாம் துல்லிய உணர்ச்சிகளையும், நவரசங்களையும் கவின்பெறச் சொல்வதில் தமிழ் வசனம் மிகவும் முன்னேறி விட்டது. ஆகவே இந்நூலின் தமிழ் நடை உயிரற்றதாய் நாடக மேடைப் பாணியில் போவதுபோல் தோன்றுகிறது.

நிறைந்த புலமையும், கவிபாடும் சக்தியும், வாய்ந்த சலசலோசனச் செட்டியார் அவர்கள் இளமையில் மறைந்தது தமிழகத்தின் துர்ப்பாக்கியம்.

தென்னிந்திய சைவசித்தாந்தக் கழகத்தாரின் வெளியீடுகள் அழகும் செம்மையும் வாய்ந்தன. இந்நூலையும் படங்களுடன் கவர்ச்சியான ரூபத்தில் வெளியிட்டிருக்கிருர்கள்.

சி. வைத்தியலிங்கம்

**NEW APPROACH TO SPELLING** by: GRACE THURAISINGHAM (First Class English Trained); *Publishers:* S. S. Sanmuganathan & Sons, JAFFNA; *Price:* Rs. 1-50.

எந்த மொழியையும் எழுத்துப்பிழை யெதுவுமின்றி எழுதப் பயில்வதே பெரிதும் வேண்டற்பாலது. ஆங்கில மொழியைப் பயிலத் தொடங்குபவர்களுக்கு ஓர் அருந்துணையாக இந்நூல் ஆக்கப்பெற்றுள்ளது. ஆரம்ப வகுப்புகளில் எழுத்துப் பிழையின்றிப் பயில்வதற்கான சிறந்த முறையில் இந்நூல் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சிருரைப் பயிற்றுவதில் இதன் ஆசிரியை போதிய அனுபவம் வாய்ந்தவர். அதனை அடிப்படையாகக் கொண்டே சாஸ்திர ரீதியில் இதனை ஆக்கியுள்ளார். பிள்ளைகளுக்குப் பரிச்சயமான சொற்களை இந்நூற்கண், ஒழுங்கு முறையை அனுட்டித்து மிக்க ஆராய்வுடன் சேர்க்கப்பட்டுள்ளன. ஆங்கிலம் பயிற்றும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இது பேருதவி புரியுமென்பதற்குஐயமில்லை. நீடித்த ஒரு தேவையை இந்நூல் பூர்த்தி செய்திருக்கின்றது.

> நமது வாசிகசாலையில் விமர்சனத்துக்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதனைக் கவனிப்பாராக.

**நண்பன்—கவிதை—ஆசிரியர்** இரா. நாராயணன்; விலை: சதம் 40; இலங்கையிற் கிடைக்குமிடம், ஏ. சி. அன்புதாசன், 58, பெரிய தெரு, மட்டக்களப்பு.

வாழ்க்கையில் அரிய நண்பர்கள் நல்ல முறையில் அமைத்துக்கொள்ளுங் கலையை நண்பன் மூலம் ஆசிரியர் கூறியுள்ளார். நல்ல முயற்சி.

## பின்வந்த நூல்கள்

**பூவின் சிரிப்பு:** கட்டுரைகள் — ஆசிரியர்: பெ. தூரன்; விலை: ரூ. 1-8-0.

**விடுதலை:** நாவல் — ஆசிரியர்: த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ; விலை: ரூ. 1-8-0.

**கதையும் கற்பனையும்:** நாவல் — ஆசிரியர்: "மாயாவி" விலை: ரூ. 1-8-0.

இம் மூன்று நூல்களையும் பிரசுரித்தோர்: அமுத நிலையம் லிமிடெட், 91, மவுண்ட்ரோடு, சென்னை—18.

**கட்டுரை இயல்:** ஆசிரியர்: பண்டித வி. சீ. கந்தையா; பிரசுரம்: சுதேசி மார்ட், பெரிய தெரு மட்டக்களப்பு.

**நவ இலங்கை:** ஆசிரியர்கள்: எச். ஏ. ஜே. ஹுலுகல்லே; குல. சபாநாதன்; பிரசுரம்: இலங்கை சமாசாரப் பகுதி; விலாசம்: தபாற்பெட்டி 500, கொழும்பு.

**THE GAL OYA VALLEY PROJECT IN CEYLON** by: R. L. BROHIER, O. B. E., F. R. G. S. *Publishers:* The Department of Information, Ceylon: *Price:* Re. 1-50.

### ஆசிரியருக்குக் கடிதங்கள்

## தமிழ் விழாவும் சைவப் பெரியாரும்

சில தினங்களுக்கு முன் நான் சைவ வித்தியா விருத்திச் சங்கக் காரியதரிசியும் தமிழ் அபிமானியுமான திரு. சு. இராசரத்தினம் அவர்களைத் தரிசித்து அப் பெரியாருடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது தமிழ் விழாப் பற்றிய பேச்சும் எழுந்தது.

தமிழ் விழாவைப் பற்றி அப் பெரியார் மகிழ்ச்சி அடைவதைப் பார்த்துத் 'தமிழ் விழாவைப் பற்றிக் கொழும்புத் தினசரி ஒன்றில் வெளியான சில கடிதங்களில் தங்கள் பெயரும் சேர்க்கப்பட்டிருக்கிறது; தங்களுக்குத் தெரியுமா' என்று கேட்டேன். உடனே அவர் 'என்ன சங்கதி? ஒன்றும் தெரியாதே!' என்றுர். அப்பொழுது நான் குறித்த தமிழ்த் தினசரியில் அவரைப்பற்றி வெளியான வசனங்களைக் கூறினேன்.

திரு. இராசரத்தினம் அவர்கள் சிரித்து விட்டு, 'அது யாரோ பத்திரிகைக்காரர்; தமது நிர்வாகிகள் சந்தோஷப்படுவார்கள் என்று நினைத்து வெளியிட்டனர் போலும்' என்றுர். 'நல்ல ஒரு கருமத்தை யாராவது தொடங்கும் போது நாலுபேர் கல்லெறிவது வழக்கமாகிவிட்டது. இதை எவரும் பொருட்படுத்தக்கூடாது. தமிழ் விழா நடைபெறுவதினுல் நாட்டில் ஒரு புத்துணர்ச்சியும் அன்பும் பெருகுமல்லவா? இது நல்ல கருமம் அல்லாதாயின் இந்த நாட்டிலே தொடங்கப்பெறும் பிற காரியங்கள் எல்லாம் நல்ல கருமங்களா? ஒன்றுலும் நஷ்டமில்லையா? மிகவும் நஷ்டமானதை ஒருவரும் எதிர்க்க முன்வருவதாயில்லையே' என்று கூறினர்.

சி. க. வேலாயுதபிள்ளை
ந/வேலி, 21-3-51

### சேர் இராமநாதன் விழா

காலஞ்சென்றசேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் 100-வது ஜயந்தி விழா 1951-ம் ஆண்டு ஏப்பிறில் மாசம் 16-ந் திகதி வருகிறது. எங்கள் பெரிய தேசாபிமானிகளி லொருவருக்கு எமது நன்றியைக் காட்டுவதற்கு அறிகுறியாக அத்தினத்தைத் தக்கமுறையில் இலங்கை மக்கள் கொண்டாடுவது ஏற்ற தொன்றுகும்.

வலென்றைன் எஸ் பெரேரு
எஸ். சிவசுப்பிரமணியம்
கொழும்பு
21-3-51

### சிங்களமும் தமிழும்

ஈழகேசரி 18-3-51 இதழில் அசலான பிரேரணை' என்ற ஆசிரிய வாசகத்தை வாசிக்கும் நேயர்கள் தங்களைப் புகழாதிருக்க முடியாது. ஏனெனில் எம் இலங்கையிலும் அதின் குடிசனங்களிலும் உண்மையான பற்றுள்ளவர்கள், சிங்களமும் தமிழும் எல்லோருக்கும் பாடசாலைகளில் கட்டாய பாடமாக்க வேண்டும் என்பதைத் தடையின்றி ஒப்புக் கொள்வர். பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த சில சிங்களப் பிரதிநிதிகளின் கருத்தும் இதுவேயாகும்.

ஆனுல், சிங்களச் சிருர் கட்டாய பாடமாகத் தமிழைக் கற்கவேண்டுமென்பது பிரதமர் சேனநாயகா முதலியோரின் நோக்கமல்ல. அவர்களுக்குத் தமிழர் சிங்களத்தைக் கற்றுலென்ன கற்காமல் விட்டாலென்ன. கற்காமல் விடுவதே நலம் என்பது அவர்களது அந்தரங்க விருப்பம். ஏனெனில் விளம்பரங்கள் செய்யும்போது சிங்களம் எழுத வாசிக்கத் தெரிய வேண்டுமெனத் தெரிவிப்பது தமிழரைப் புறக்கணிப்பதற்குச் செய்துகொள்ளும் உபாயம். இவர்கள் சிங்களத்தையும் கற்றுத்தேறி விட்டாற் சேனநாயகக் கட்சியினருக்கு எவ்வளவு துன்பத்தை விளைக்கும் என்று பாருங்கள்.

அப்படிக் கற்றுவிட்டால் அவர்கள் வேறு உபாயங்கள் புதிதாய்த் தேட வேண்டி நேரும் என்பது எனக்கு விளங்குவதுபோற் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. குமாரசாமி அவர்களுக்கும் நன்கு தெரியும். அன்றியும் அவர் அவர்களின் தோழன். யு. என். பி. கட்சியின் அநுதாபர். எப்படி அக் கட்சியினரின் நோக்குக்கு மாருகப் பிரேரணையைச் சமர்ப்பிப்பது? அப்படிச் சமர்ப்பித்தால் அவருக்கு இப்போது இருக்கும் சிங்கள மதிப்பு அற்றுப்போய், அவரும் வவனியாப் பிரதிநிதி திரு. சுந்தரலிங்கம் அவர்களைப்போற் சிங்களரால் இகழப்படுவார் என்பது திடம் அல்லவா? ஆனுல் தமிழரையும் பிரியப்படுத்தத் திரு. குமாரசாமிக்கு விருப்பம். ஆனதாற்றுன் அவர் இப் பிரேரணையைச் சமர்ப்பித்தார். இரு பகுதியாரையும் பிரியப்படுத்தும் நோக்கத்துடன், எங்களுக்குள் ஒரு பழமொழி உண்டு. "பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழன்" என்று. திரு. குமாரசாமி அவர்கள் கொண்டு வந்த பிரேரணை இவ் வகுப்பைச் சேர்ந்தது. அப் பிரேரணை என்னவெனுல், தமிழைச சிங்களப் பிள்ளைகளும், சிங்களத்தைத் தமிழ்ப் பிள்ளைகளும கட்டாயமாய்க் கற்கவேண்டுமென்பதல்ல. அப்படிச்செய்தாலோ என்பதை "ஆலோசிக்கும்படி" எவ்வளவு வழுவழுத்த பிரேரணை என்பதைச் சொல்லவும் வேண்டுமா? திரு. குமாரசாமி அவர்களுக்கு இவ் விஷயத்திலே திட நம்பிக்கை இருந்தால், ஏன் கட்டாய பாடமாக்க வேண்டுமென்று சொல்லிப் பிரேரணையை முடிக்க ஏலாது? சிங்கள முதலாளிகளைப் பிரியப் படுத்தவே இவ்வளவு வழுவழுப்பாய்ப் பிரேரணையைச் சமர்ப்பித்தார். திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. குமாரசாமி முதலியோர் தமிழ்ப் பிரதிநிதிகளாய்ப் பிரதிநிதிகள் சபைக்குட் புகுந்து அரசாங்கக் கட்சிக்குச் சாதகமாகக் கையுயர்த்தி எமக்கும் எம் பிற் சந்ததிக்கும் விளைக்கும் கொடுமைக்கு ஓர் கங்கு கரையில்லை.

1. கொடி விஷயத்தில் நடந்து கொண்டதைப் பாருங்கள்.

2. பிரஜா உரிமை விஷயத்தில் நடைபெறும் அநியாயத்துக்கு அளவு கணக்குண்டோ? எத்தனை ஆயிரம் இந்தியருக்கு வாக்கைப் பறிமுதலாக்கினுர்கள்?

3. எத்தனை ஆயிரம் தமிழ் இஸ்லாமிய வாக்காளரை வாக்காளர் இடாப்பிலிருந்து தம் இஷ்டப்படி சிங்கள அரசாங்கம் நீக்கியது. இதற்கு எங்கள் பிரதிநிதிகளான திருவாளர்கள்: பொன்னம்பலம், குமாரசாமி, கனகரத்தினம், இராமலிங்கம் ஆதியோர் தமிழ் இனத்தைப் பாதுகாக்க என்ன பிரயத்தனங்கள் எடுத்தார்கள்?

மந்திரி பொன்னம்பலம் அவர்கள் சொன்னுர்கள், தமிழர் சிங்களருடைய நல்லெண்ணத்தையும் நன் மதிப்பையும் வேண்டினுல், அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று. அவர்களுடன் ஒத்துழைக்கத் தமிழர் எல்லாருக்கும் விருப்பம. ஆனுல் இரு வகுப்பினரும் சம அந்தஸ்தினராய் இருந்தே ஒத்துழைக்கலாம. அடிமை வாழ்வு வாழ்ந்து அவர்களைக் கெஞ்சி வாழ்தல் ஒற்றுமை வாழ்வல்ல. ஒரு சிலரின் பதவி வேட்டைகள் தமிழருக்கு எவ்வளவு இழிவைக் கொண்டுவந்து விட்டதென்பதை உணர்ந்து பாருங்கள்.

வே. விசுவலிங்கம்
கொக்குவில்
19-3-51

### மயிலிட்டிக் கிராம சங்கத் தலைவர் தெரிவு

பலாலிதெற்கு வழக்கறிஞர் திரு. வ. இராசநாயகம் அவர்கள் சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் மயிலிட்டிக் கிராம சங்கத் தலைவராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை அறிந்து மகிழ்கின்றேும்.

A book that supplies a long felt need!

**First Steps to English**

by GRACE THURAISINGHAM

Price: 50 cts. ... Postage 15 cts.

PUBLISHERS:
North-Ceylon Tamil Works Publishing House
CHUNNAKAM

நீண்டகால தேவையை நிவிர்த்திசெய்யும் நூல்!

ஆங்கிலம் பயில்வதற்கு முதற்படி

ஆசிரியை: கிறேஸ் துரைசிங்கம்

விலை சதம் 50. தபாற்செலவு சதம் 15.

பிரசுரிப்போர்:
வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், சுன்னுகம்

வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பக வெளியீடு

எஸ். எஸ். ஸி. வகுப்புக்குரிய

அரிச்சந்திரபுராணம்

மயானகாண்டம்

பதவுரை, விரிவுரை, இலக்கணக் குறிப்புக்களுடன்.
விலை ரூபாய் 1-00 :: தபாற் செலவு -/35 சதம்
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கப்பெறும்.

தனலக்குமி புத்தகசாலை : சுன்னுகம்

★ நீதியின் வழியே எடுத்துக் கூறிய விதுரன் நன்மொழிகள் பொருமையின் சிகரத்திலேறி நர்த்தனம் செய்யும் துரியோதனனுக்கு வெறும் கருத்தற்றனவாகவே காணப்படுகின்றன.

# சூழ்ச்சியுங் கற்பும்

த. யோகநாதன்

இராசசூயயாகம் முடிந்ததும் இந்திரப் பிரத்தத்திலிருந்து துரியோதனனோடு வந்த அரசர்களெல்லாரும் தம்தம் மாளிகையில் துயின்று மறுநாட் காலை இராச சபையை அடைகின்றனர். கன்னன், சகுனி, துச்சாதனன் முதலானவர்கள் பாண்டவரின் சீரும் சிறப்பையும் அழித்தற்கு வேண்டிய உபாயங்களைப்பற்றிக் கலந்தாலோசிக்கின்றனர். துரியோதனனோடு சேர்ந்து வஞ்சனை வழியினாலோ? அல்லது போரினாலோ? எவ்வழியினாலாவது பாண்டவரை வெல்லவேண்டுமெனத் திட்டமிடுகின்றனர். இச்சூழ்ச்சிக்கு உறுதுணையாளனாகச் சகுனிதான் முன்னிற்கிறான். மருகனை வாழ்விக்கச் செய்யும் கைங்கரியத்திற் பாண்டவரை நாடு நகர் இழந்து அடிமைகளாகச் செய்தற்குரிய சூதாட்டமே சிறந்த வழியென்பதை அவர்களுக்கு எடுத்துக் கூறுகிறான். வஞ்சனைவழியால் வெல்லக் கருதுவது அஞ்சுபவர்களின் செயலன்றோ எனத் தடுத்துப் போர்செய்வதே சிறந்த முறையாமெனச் செருக்குடன் புகன்ற கன்னனுக்கு அது கூடாதென்று தடுத்துக் கூறுகிறான் சகுனி.

இடிம்பனை, பகனை, சராசந்தனை தனது தோள் வலிமையினாலே போர் செய்து வெற்றி பெற்றவன் வீமசேனனல்லவா? திரௌபதியின் கலியாண காலத்தில் பிறரால் வீழ்த்தமுடியாத யந்திரத்தை எளிதில் வீழ்த்தியவன் அவன் தம்பி அருச்சுனனல்லவா? ஆதலின் போர் செய்து வெல்வதை நினையற்க என்கிறான். தருமன் எப்பொழுதும் நியாயத்துக்குக் கட்டுப்பட்டு நேர்மையான வழியிலே நடப்பவன். அவனுக்குத் தெரியாத சூதுவழியைக் கொண்டே அவனை வெற்றியடையவேண்டும். சகுனியின் வார்த்தையைச் சிரமேற்கொண்டு நடப்பவனாகலின் உடனே துரியோதனன் சூதாடுவதே செயற்பாலதென்ற முடிபுக்கு வருகின்றான். விதுரனோ அதை ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு பாற் கோடாத இதயப் பண்பு படைத்தவன் விதுரன். துரியோதனனைப் பார்த்துப் பின்வருமாறு கூறுகிறான்: "ஐயனே! பூமியையும் அரசாட்சியையும் செல்வ வாழ்க்கையையும் தருமபுத்திரரிடமிருந்து கவர்ந்து கொள்வது உனது எண்ணமானால் பொய்மிக்க சூதாட்டத்தினால் தாழ்ந்த வழியில் கவர்ந்து கொள்ள வேண்டா. கவர்தற்குத் தக்க உபாயம் எதுவென்றால் உனது தந்தையாகிய திருதராட்டினன் வையமும் அரசும் வாழ்வும் உனக்கே உரியதாகத் தந்திடுமாறு பஞ்சபாண்டவருக்குத் திருமுகம் எழுதி அனுப்பினால் உண்மையாகவே நீ விரும்பியவை எல்லாவற்றையும் தந்துவிடுவர். இவ் வழியை விடுத்து மாயச் சூதினால் வென்று அவர் இராச்சியத்தைப் பறிக்கும் இழிவு உனக்கு வேண்டா. அது வசையேயாகும்" என நடுநின்று கூறும் விதுரன் வார்த்தைக்குத் துரியோதனன் மதிப்புக் கொடுத்தானோ?

விதுரன்பால் கோபமே வீறிட்டெழுகின்றது. அவன் கோபத்துக்கு விதுரன் பயந்து தான் சொல்லவேண்டிய வார்த்தைகளைச் சொல்லாது விடவுமில்லை. கடைசியாகச் சூரியனுக்குமுன்னே ஒளிமங்கிக்கிடந்த சந்திரன், அச்சூரியன் மறைந்த சமயத்தில் மிக்க ஒளியுடன் விளங்கித் தோன்றுமாறு போலக் குருகுலத்தவராகிய நீங்கள் மாறுபட்ட உளத்தினராய் ஒற்றுமையின்றி வாழ்வீர்களாயின், வலியடங்கி ஒதுங்கிக் கிடந்த பகையரசரெல்லாரும் குருகுலத்தவரை எளிதில் வெல்லலாமெனக் கருதிக்கொள்வர். ஆகவே, என்றும் சோதர பாசத்துடன் பாண்டவரோடு ஐக்கியமாக வாழ்வதே சிறந்ததாகும் என்கின்றான். நீதியின் வழியே எடுத்துக் கூறிய விதுரன் நன்மொழிகள் பொருமையின் சிகரத்திலேறி நர்த்தனம் செய்யும் துரியோதனனுக்கு வெறும் கருத்தற்றனவாகவே காணப்படுகின்றன.

சகுனியின் ஆலோசனையின் படி துரியோதனன் ஒரு அழகான புது மண்டபத்தைக் கட்டுகிறான். விதுரன் "நொதுமலரே போல் நான் நடந்துகொள்வேன்" எனக் கூறியபோதிலும் ஈண்டு பாண்டவரை அழைத்துவரத் திருதராட்டினன் கட்டளைக்கிணங்கி இந்திரப்பிரத்த நகரம் செல்லவேண்டியவனாகின்றான். தமையன் கேள்விக்கு இசையவேண்டிய முறைமையாதலின் விதுரன் தூதுவனாகப் பாண்டவரிடத்துப் போதல் குற்றமாகா. விதுரன் பாண்டவர் இருப்பிடம் சேர்கின்றான். தான்வந்த காரியத்தை ஆதியோடந்தம் ஒன்றும் ஒளியாது சொல்கின்றான். திருதராட்டினன் தந்த திருமுகத்தைத் தருமன் கையிற் கொடுக்கின்றான். தருமன் வாசித்துவிட்டுத் துரியோதனின் பொல்லாத சூழ்ச்சியைப்பற்றிப் பழித்துக் கூறுகிறான். சூதாடுவதால் ஏற்படும் கேடுகளைப்பற்றி விளக்கிச் சொல்கிறான். தலைமை, பராக்கிரமம், வலிமை, சேனை, அழகு, வெற்றி, குடிப்பிறப்பு, மானம், செல்வம், பெருமை, வம்சம், இன்பம், ஒளி, நற்குணம், ஆசாரம், புகழ், கல்வி இவையெல்லாம் ஒரு சேர அழிந்துவிடும் என்பதே அவன் எடுத்துக்கூறிய நியாயங்களாம். இதனையே பாரதம் பாடிய வில்லிபுத்தூரார் மூக்காலும் உணரத்தக்க வகையில் தந்து நிற்கிறார்.

"அடியு மாண்மையும் வலிமையுஞ்
சேனையு மழகும் வென்றியுந்
தத்தங்
குடியு மானமுஞ் செல்வமும்
பெருமையுங் குலமு மின்பமுந்
தேசும்
படியு மாமறை யொழுக்கமும்
புகழுமுன் பயின்ற கல்வியுஞ்
சேர
மடியு மான்மதி யுணர்ந்தவர்
சூதின்மேல் வைப்பரோ? மனம்
வையார்"

"பழகியசெல்வமும்பண்புங்கெடுக்குங்
கழகத்துக் காலை புகின்"

"உடைசெல்வ மூறொளி கல்வியென்
றைந்தும்
அடையாவா மாயங் கொளின்"

என்ற திருக்குறட் பாக்களும்

"உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும்
வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கும் —
மருவு
மொருவரோ டன்பழிக்கு மொன்றல்ல
சூது
பொருவரோ தக்கோர் புரிந்து"

என்ற நளவெண்பாப் பாட்டும் ஈண்டு நோக்கற்பாலன.

தருமன் தூதாக வந்த விதுரன் தனது சிறிய தந்தையென்ற முறையில் யாம் செயற்பாலதென்ன வெனக் கேட்கின்றான். அதற்கு விதுரன் தூதனின் இலட்சணத்தில் மாறுகொள்ளாதவனாய், தருமனே! "உன் விருப்பத்தின்படியே செய்" என்று ஒரே வார்த்தையில் கூறி முடிக்கின்றான். அடுத்தபடியாகத் தருமன் தம்பியர் ஆலோசனையைக் கேட்கின்றான். வீமன் முதலாய நால்வரும் அத்தினாபுரி போதல் கூடாதென்று கூறக் கேட்டும் தருமன் தந்தை சொல் கடப்பது நீதியாகாதென்ற நேர்மையனாய் அவர்க்கு எடுத்துக்கூறுவதைப் பாருங்கள்: நம்மை வருமாறு கட்டளையிட்டவனோ? பெரிய தந்தை. நம்மை அழைத்துச்செல்லவந்தவனோ சிறியதந்தை. ஆதலின் நாம் போகாதிருந்தால் அது பழிக்கே காரணமாய் முடியும். அன்றியும் "ஊழிற் பெருவலி யாவுள". எனவே நாம் அங்கு போவதை மறுக்கற்க என்கின்றான். நால்வகைச் சேனைகளும் புடைசூழ அத்தினாபுரி செல்கின்றனர். பாண்டவர் விதுரன் மாளிகையில் இருக்கும்போது துரியோதனனால் அனுப்பப்பெற்ற பிராதிகாமி தருமனைத் தொழுது துரியோதனன் தான் கட்டிய புது மண்டபத்தினது அழகை நீ பார்க்க வேண்டுமென்று உன்னை அழைத்து வருமாறு என்னை அனுப்பியுள்ளான் எனலும் தருமன் முதலாய ஐவரும் திரௌபதியைக் காந்தாரியிடம் அனுப்பிவிட்டுத் துரியோதனன் சபைக்கு வருகின்றனர். அந்த இராஜசபையில் வெள்ளையுள்ளம்படைத்த தருமனானவன் துரியோதனனால் கட்டப்பட்ட புதுமண்டபச் சிறப்பை வியந்து நிற்ப துரியோதனனோ தருமனைப் பார்த்து நமது தந்தையின் மாளிகையில் இனிய உணவை உண்ணப்போகின்ற வரையிலும் இச்சபையிலிருந்து காலம் இனிது கழியுமாறு சகுனியும் நீயும் "சூதுகொண்டு நிகழ் விலாசம் அயர்கிரோ?" என்று வினவுகிறான்.

உடனே தருமன் அது வஞ்சனைக்கிடமான விளையாட்டு. ஆதலின் வேண்டாம் என மறுத்துரைக்கின்றான். தருமனை உடன்படுத்தச் சகுனி ஆண்ட சாதுரியநாதனென்னே! சபையோரைப் பார்த்து தவறுகட்குச் சிறிதும் இடமில்லாத சூது கருவி உருளுவதனால் வரும் தாயம் இருதிறத்தார்க்கும் ஒத்ததே. காய்களை வைப்பதில் அறிவின் திறம் உண்டல்லாமல் மாறுபாடான கபடம் சிறிதுமில்லையே. அப்படியிருக்கச் சூதாட்டத்தில் வஞ்சனையுண்டு எனத் தருமன் கூறினால் இவனை நோக்கிச் சூதாட வா என்று அழைப்பார் யார்? ஐயனே! சூதாட்டத்தில் வெற்றியும் தோல்வியும் நமமிருவர்க்கும் சமமானவை. அதை விடுத்துச் சூதாட்டம் வஞ்சகத்தை உடையதென்று வருந்துபவன்போல நீயும் பின் வாங்கிச் செல்வானேன்? நீ உலோபியா? என்று தருமனை முன்னிலைப்படுத்திச் சூதாட்டத்தில் ஆவேசங்கொள்ளுமாறு செய்கின்றான். மேலும் பசுவைக் கொன்ற கொலைபாதகன்போல் அஞ்சற்க. சூதாடுவதற்கு உடன்பட்டு வருவாயாக என்று சொல்லவே தருமன் சூதாட ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

இருவரும் சூதாடுகின்றனர். தருமன் யாவும் தோற்றுவிட்டான். ஈற்றில் தங்களையே பந்தயப் பொருளாகக் கொண்டு ஆடுமாறு தருமனைக் கேட்கும்படி துரியோதனன் சகுனியைத் தூண்டிவிடுகிறான். அதிலும் தோற்கவே திரௌபதியைப் பந்தயம் வைக்கும்படி சகுனி சொல்ல மனம்பொறானாய் விதுரன் திருதராட்டினனிடம் மகா பதிவிரதையும் பாண்டவர்க்கே உரிய பத்தினியுமாகிய திரௌபதியையும் பந்தயப் பொருளாகக் கேட்கும் இவ்வக்கிரமச் செயல் நடக்கவும் வாளாவிருப்பது அழகோ? இருதிறத்துப் புதல்வரிடத்தும் பட்சபாதமின்றி ஒரு நிகராக இருந்து நியாயம் வழங்கவேண்டிய நீ பகுத்தறிவற்ற மிருகம் போலச் சிறிதும் விவேகமின்றி இரக்கங் காட்டாதிருப்பது முறைமையோ? இதற்கு ஊனக்கண்ணுடன் ஞானக் கண்ணுமற்ற திருதராட்டினன் யாதும் கூறவில்லை.

சகுனி சொற்படியே தருமபுத்திரன் திரௌபதியைப் பந்தயம் வைத்துத் தோற்கின்றான். தருமன் எல்லாப் பொருள்களையும் இழந்த பின்பும் மனம் கலங்கினானல்லன். துரியோதனனுக்குத் தன்னை அறியாத ஒரு செருக்கு ஏற்படுகின்றது. திரௌபதியைப் பிடித்திழுத்துவருமாறு தன் தம்பி துச்சாதனனை அனுப்புகிறான்.

துச்சாதனன் திரௌபதியைப் பார்த்துத் துரியோத

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)






**அன்பானமருமக்களே,**

யாழ்ப்பாணத்திலே ஏப்பிரல் மாதத்தில் மிகச் சிறப்பாக நடைபெறவிருக்கும் தமிழ்த்திருவிழாவைப்பற்றி அறிய உங்களில் அநேகர் ஆசைப்படுகின்றீர்கள்.

மருமக்களே, தமிழ்த்திருவிழா சென்னையிலுள்ள தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்று வருகின்றது. தமிழ்மக்களின் ஒற்றுமையைப் பெலப்படுத்துவதே தமிழ்த் திருவிழாவின் முக்கிய நோக்கமாகும்.

இத்திருவிழா முதலாவதாக மதுரையில் நடைபெற்றது. பின்னர் திருவாரூரில் நடைபெற்றது. சென்றவருடம் கோயமுத்தூரில் நடைபெற்றது. இவ்வாண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது.

இதற்கான சகல ஒழுங்குகளும் நடைபெற்று வருகின்றன. விழாவானது பரமேஸ்வராக் கல்லூரியில் விசேஷமாக அமைக்கப்படும் மாபெரும் பந்தலில் நடைபெறும். கண்ணுக்கினிய பல காட்சிகளை எனது மருமக்கள் விழாவின்போது கண்டு மகிழப் போகின்றனர். அடுத்த வாரமும் தமிழ் விழாபற்றிய சில செய்திகளைக் கூறுவேன். பொறுத்திருக்கவும்.

மருமக்கள் பலரிடமிருந்து கட்டுரைகளும் கதைகளுங் கிடைத்து வருகின்றன. இவற்றைப் பார்வையிட்டுப் பாலர் பகுதியிற் பிரசுரிப்பேன். சில மருமக்கள் தங்கள் விஷயங்களை உடனே வெளியிடுமாறு எழுதுகின்றனர். இது இயலாதகாரியம். இடங்கிடைக்கும்போதுதான் எனது மருமக்களின் கட்டுரைகளையும் கதைகளையும் தவறாது பிரசுரிப்பேன். அனைவருக்கும் எனது ஆசீர்வாதம்.

கேசரிமாமா

**கவனியுங்கள்**

பாலர் பகுதியிற் சேரவிரும்பும் பிள்ளைகள் ஈழகேசரிப் பத்திரிகையில் வெளியாகும் பிரவேசப் பத்திரத்தை நிரப்பி அதை வெட்டி அனுப்பவேண்டும். வெறுங் கடதாசியிற் பெயரையும் விலாசத்தையும் எழுதியனுப்பிவிட்டுத் தம்மைப் பாலர் பகுதியிற் சேர்க்குமாறு பலர் எனக்கு எழுதுகின்றனர். ஈழகேசரிப் பத்திரிகை கிடையாதுவிட்டால் ஈழகேசரி நிலையத்துக்குப் பணம் அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

# அழகான கம்பளை

### மே.9. வேத-தணிகாசலம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

சிங்களர், முஸ்லீம்கள், இந்தியத் தமிழர், யாழ்ப்பாணத் தமிழர் என்போர் கடைகளும், ஹோட்டல்களும்வைத்து நடத்துகிறார்கள். இரு புத்தகக் கடைகளும் ஒரு பத்திரிகைக் கடையும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

புத்த கோயில்களும், முஸ்லீம்களின் பள்ளிவாசல்களும், கிறீஸ்தவ ஆலயங்களும் இருக்கின்றன. இவைதவிர, இந்தியத் தமிழர் ஆதரவில் ஒரு கதிரேசன் கோயிலும், யாழ்ப்பாணத் தமிழரின் நிர்வாகத்தில் ஒரு மாரியம்மன் கோயிலும் இருக்கின்றன. இவ்வாலயங்களில் வருடந்தோறும் பெருந்தொகையான பணச் செலவிலே திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

ஐந்து ஆங்கிலக் கல்லூரிகளும் நான்கு தமிழ்ப்பாடசாலைகளும், ஒரு கன்னியாஸ்திரி மடமும், சிங்களப் பாடசாலைகள் பலவும் உண்டு. சென்ற் அன்ட்றூஸ் கல்லூரி முன்றிலில் ஒரு புல்வெளி மைதானம் இருக்கின்றது.

இலங்கையை ஆண்ட முடியுடை வேந்தர் பலர் இராசதானியாக இருந்து ஆட்சி செலுத்திய இடங்களில் இக் கம்பளையும் ஒன்று. வேந்தர்களில் 4-ம் புவனேகவாகு குறிப்பிடத்தக்கவன். அவன் கட்டுவித்த கடலதெனிய விகாரையும், மற்றைய லங்காதிலக விகாரையும், நியன்கம்பாய விகாரையும் கம்பளையைச் சேர்ந்த பகுதியிலேயே உண்டு.

கம்பளைப் புகையிரத நிலையத்திலிருந்து, அரை மைல் தூரத்திலே உள்ள 'சினுப்பிட்டி' என்றஇடத்திலேதான் இலங்கையிலே முதன் முதல் கோப்பிச்செடி பயிராக்கப்பட்டது. இந்தச் சுற்றுடலிலே கம்பளைத் தேநீருக்கு விசேட மதிப்பு உண்டு. குணமும் மணமும் நிறைந்தது. இவ்வளவு சிறப்பான கம்பளை நகரம் இடையிடையே வெள்ளத்தாற் பாதிக்கப்படுகின்றது 1947-ம் வருட வெள்ளப்பெருக்கால் ஏற்பட்ட சேதங்களின் அடையாளங்கள் இன்னும் மறையவில்லை. அக்கொடிய வெள்ளக் கதைகள்—இல்லை—பரிதாப நிகழ்ச்சிகள் பலவற்றைக்கேட்க உடலம்நடுங்கும்! சென்றவருடமும் ஒரு பெருக்கு ஏற்படவிருந்தது. நல்லகாலமாக அது நடைபெறவில்லை. இரண்டு மூன்று நாட்கள் மழை தொடர்ந்து பெய்வதாயின் மக்கள் முகத்திலே 'வெள்ளம் பெருகிவிடுமே' என்ற பீதி ஏற்படுவதுண்டு. ஒரே நாளிற் பெரும்பாலும் (மழை, வெயில், பனி) மூன்று சுவாத்தியத்தையும் கம்பளையில் அனுபவிக்கலாம். கம்பளை அழகான ஒரு நகரமென்பதைச் சொல்லவும்வேண்டுமா?

## மருமக்கள் கடிதங்கள்

**அன்புள்ள கேசரி மாமாவுக்கு**

வணக்கம். நான் ஈழகேசரி பாலர் பகுதியிற் சேர்ந்தபின் என் வகுப்பு மாணவிகள் பலர் சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் சேர்வதற்கு நானே ஒரு வழிகாட்டியாக இருந்தேன் என்பதை நினைக்குந்தோறும் எனக்கு மகிழ்ச்சி உண்டாகின்றது.

மே.394 த. ஜெயலட்சுமி
இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை
மண்டூர் 17-3-51

•

**அன்புள்ள கேசரி மாமா அவர்கட்கு**

வணக்கம். பண்டைப் பழகாமமாகிய எங்கள் கிராமத்திலும், தங்கள் ஈழகேசரியின் அரியசேவையும் பாலர் பகுதியின் பணியும் கிடைப்பதுபற்றி நான் மிகவும் சந்தோஷம் அடைகின்றேன்.

கா. சிவரத்தினம்,
இராமகிருஷ்ண சங்கப் பாடசாலை,
பழுகாமம், பெரிய போரதீவு.
18-3-51

•

**கேசரிமாமா அவர்கட்கு:**

வணக்கம். அநேக தினங்கட்குப்பிறகு கடிதம் எழுதுகிறேன். மாமா ஆச்சரியப்படவேண்டியதில்லை.

"பள்ளிக் கூடம் சென்றிடுவோம்
பாட மெல்லாம் கற்றிடுவோம்
துள்ளி வீணே நாட் கழியோம்
சோம் பேறியா யிருக்க மாட்
டோம்"

என்று பாலர் கீழ்ப்பிரிவில் படித்ததை யான் இன்றும் ஞாபகத்தில் வைத்துள்ளேன்.

நான் அன்று எஸ். எஸ். ஸி. தமிழில் சித்தியடைந்தேன். பின், ஆசிரிய பயிற்சிக்கலாசாலைக்குச் செல்வதற்கான பரீட்சைக்குப் பிரவேசித்தேன். முடிவைஎதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

இப்பொழுது நான் சும்மா இருக்கவில்லை. ஆங்கிலம் படித்துக்கொண்டிருக்கிறேன். வீட்டுவேலை யதிகம் ஆனபடியாற் கட்டுரைகள் எழுதிஅனுப்புவதிலேதாமதம்ஏற்படுகின்றது.

இதோ இன்று ஒரு கட்டுரை அனுப்பியுள்ளேன்.

மே. 263. செ. அகமது
பெரிய குடியிருப்பு
கற்பிட்டி 19-3-51

**பங்களூர்க் கடிதம்**

**அன்புள்ள
கேசரி மாமாவுக்கு:**

வணக்கம் பல. நான் பங்களூரில் வசிப்பவள். தங்கள் ஈழகேசரியை வாரந்தோறும் படித்து மகிழ்கிறேன். அதில் வெளியாகும் கட்டுரைகளும் கதைகளும் மிகவும் நன்றாக இருக்கின்றன. தங்கள் பாலர் பகுதியில் உள்ள தங்கள் மருமக்கள் எழுதியுள்ள கதைகளும், கட்டுரைகளும் மிகவும் நன்றாயிருக்கின்றன. அவற்றைப் படிக்கும்போது எனக்குக்கூடக் கதையோ அல்லது கட்டுரையோ ஈழகேசரிக்கு எழுத ஆசையாக இருக்கிறது. நான் இங்குள்ள மகாராணிக் கல்லூரியில் 'இண்டர்மீடியட்' இரண்டாம் வகுப்பிற் படிக்கிறேன். நான் பத்திரிகைக்குக் கட்டுரை எழுதுவது இது தான் முதல் தடவை. நீங்கள் எனக்கு ஊக்கமளிப்பீர்களென்று நினைத்தே இக் கடிதத்தைத் தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் எழுதுகின்றேன்.

தங்கள் அன்பான பதிலை எதிர்பார்க்கும்

தங்கள் அன்புள்ள
ஆர். மங்கையர்க்கரசி
202 'V' வீதி
சாமராஜப்பேட்டை
பங்களூர்—2.

# எங்கள் ஊர்

### மே 429. கு. பத்மாவதி

மண்டூர் கிழக்கிலங்கையின் தலைநகரமான மட்டக்களப்பு என்னுமிடத்திற்குத் தென்மேல் திசையில் உள்ளது. மட்டக்களப்பு வாவியென்னும் கடலேரி மூன்று திசைகளிலும் சூழ்ந்துள்ளது. தெற்குக் கரையிற் பால்போன்ற வெண்ணிற மணல் வெளியிற் புராதன கந்தசுவாமி கோயில் அமைந்துள்ளது. அதையடுத்து முறையே மேற்கே வள்ளியம்மன் கோவிலும் தெற்கே தெய்வானை அம்மன் கோவிலும் அமைந்துள்ளன.

சுமார் ஏழு, எட்டு ஏக்கர் விஸ்தீரணமான கோயில் வீதியை அடுத்து ஸ்ரீ இராமகிருஷ்ண சங்க சிரேஷ்ட பாசாடலை உண்டு. வீதியை அடுத்த ஏனைய திசைகளிற் பன்னிரண்டு மடங்கள் உள்ளன. மேலும் கிராமத்தின் மத்தியில் ஓர் உபதபாற்கந்தோரும் அரசினர் வைத்தியசாலை ஒன்றும் உண்டு. இலங்கையை ஆங்கிலேயர் கைப்பற்றுவதற்கு முன்னர் முதலாம் படையெடுப்பில் கண்டி அரசனால் துரத்தப்பட்ட ஆங்கிலேய தளபதியும் இன்னும் சிலரும் மண்டூருக்கூடாக வந்தனராம். கந்தசுவாமி கோயிலருகே கூடாரமடித்து ஒரு இரவைக் கழித்தனராம். அன்று கோயிலிலுள்ள அர்ச்சகருக்குத் துன்பம் விளைவித்ததால் மனம் வெதும்பிய அவர் ஈசனைத் துதித்தாராம். அன்றிரவே ஒரு குழவிக் கூட்டம் பட்டாளத்தவர்களைத் தாக்கியதாம். இதனால் நள்ளிரவிலே அவர்கள் அவ்விடத்தைவிட்டு ஓட்டம் பிடித்தனராம். அவ்வேளை அவர்களால் விடப்பட்ட ஓர் துப்பாக்கியும் ஒரு வாளும் இன்றும் இக் கோவிலில சேமிக்கப்பட்டிருக்கின்றன.

அவை இப்போதும் துருப்பிடித்த நிலைமையில் கோவிலில் இருக்கின்றன. இக்கோவிலில் பூஜை முதலியன கதிர்காமக் கோயிலைப் போலவே நடைபெறுகின்றது. இக்கோவிற் பூசகர் 'கப்புகனூர்' என்று அழைக்கப்படுவார். திரை திறவாமல் பூஜை செய்வது இக்கோவிலில் வழக்கமாகும். ஒவ்வொரு வருடமும் ஆவணி மாதத்தில் திருவிழா நடைபெறும். மண்டூரின் வடமேல் பகுதியில் நெல்வயல்கள் உண்டு. தென்மேற்கே புன்செய் நிலங்களுண்டு. எங்களூர் மக்கள் நாட்டுப் பாடல்களைப் பாடிக்கொண்டே வயல் வேலைகளை மகிழ்ச்சியுடன் செய்வர். வயல் உழுதல்முதல் சூடுபோடுதல் வரை எல்லா வேலைகள் செய்யும்போதும் ஒவ்வொரு தொழிலுக்கும ஏற்ற பாட்டுக்களைப்பாடுவார்கள். வயல்வேலைகளின் பின் தங்கள் வீட்டுத் தோட்டங்களில்வேலைசெய்வர்.

அறுவடை முடிந்து சூடு போட்டு நெல் வீட்டுக்கு வந்ததும் நாட்டுக் கூத்துப் போன்ற களியாட்டங்களில் ஈடுபடுவார்கள். யுத்த காலத்திலும் எங்களுக்கு உணவுப் பஞ்சம் ஏற்படவில்லை. எங்கள் மாகாணத்திலிருந்துதான் அதிக அளவான நெல் ஏற்றுமதியாகி இலங்கையின் ஏனைய மக்களை யுத்தகாலத்தில் தாபரித்தது. எங்களூர் மக்களால் சனசமூக நிலையமென ஒரு பொது ஸ்தாபனம் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது. அங்கு ஒரு வாசிகசாலையும் உண்டு. ஓய்வான நேரங்களில் முதியோர்கள்கூட அங்கு போய் வாசித்து மகிழ்வர். வானொலி மூலம் உலகப்புதினங்களையும் இன்னிசைப் பாட்டுகளையும் கேட்டு மகிழ்வர்.

எங்களூர் விளை பொருட்கள் நெல், சிறுதானியங்கள், தேங்காய் முதலியன. எங்கள் ஊர் கீரைக்கு இணையான கீரை இலங்கையின் எப்பாகத்திலும் கிடையாது. அது அவ்வளவு உருசியுள்ளது.

**பிறந்த தின வாழ்த்துக்கள்**

•

**25-3-51—31-3-51**

மே.118. ஆ. பாலகிருஷ்ணன், மே.141. ச. திருநாவுக்கரசு, மே.210. ந. துரையம்மா, கீ. 278. வ. பராசக்தி, மே.296. சொ. சேதுராசா.

•

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக.

## புதிய மருமக்கள்

மே.471. மூ. சந்தனம் பிள்ளை, இராமகிருஷ்ண சங்கப் பாடசாலை, பழுகாமம்.

மே.472. அ. மகாலிங்கம், c/o திரு.வ. அப்பச்சி (ஆசிரியர்)நவாலிதெற்கு, மானிப்பாய்.

மே.473. ந. பரஞ்சோதி, இராமகிருஷ்ண சங்கப் பாடசாலை, பழுகாமம்.

மே. 474. கா. சிவரத்தினம், இராமகிருஷ்ண சங்கப் பாடசாலை, பழுகாமம்.

## மாமா பதில்

கீ. 322. இ. சிவாநந்தம்: மருமகனே, ஊக்கமது கைவிடேல். நாட் சென்றாலும் உமது கட்டுரையைப் பிரசுரிப்பேன்.

மே. 263. செ. அகமது: பரீட்சையிற் சித்திபெற்றதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். கட்டுரை கிடைத்தது.

**ஈழகேசரி — பாலர் பகுதி**

முழுப்பெயர்: ......................................................

விலாசம்: ......................................................

......................................................

......................................................

பிறந்ததிகதி: ......................................................

......................................................

தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

# சூழ்ச்சியுங் கற்பும்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ளன், மயனாற் சமைக்கப்பட்ட பளிங்கு மண்டபத்தில் தடுமாறிய காலை நீயும் வீமன் முதலாய நால்வரும் பரிகசித்துச் சிரித்ததை எடுத்துச் சொல்லி அன்று சிரித்த உனது வாயானது இன்று உனது தலைவனைக் கண்டு அழுது ஆற்றுமாறு நாங்கள் அவனைப் பார்த்து எள்ளி நகையாடினால் நீ மனம் பொறுக்கமாட்டாயோ? ஒருத்தியே ஐவரையும் மணம் புணர்ந்து பதிவிரதாதருமம் குலைந்து நாணமற்றிருக்கிற நீ என் பின்னே வருதற்குப் பின்வாங்கக் காரணமில்லையே என்று கூறி அவளைத் தன் இருகரங்களாலும் பற்றி இழுத்துக்கொண்டே ராஜசபையில் நுழைகின்றான். கூந்தல் பற்றி இழுத்துவரும் நிலைமையைப் பார்த்து ஆண்டிருந்த அரசர்களெல்லாரும் இரங்கித் தலை கவிழ்ந்து நின்றனரென்றால் தருமன் முதலாய ஐவரின் மனமும் என்னபாடு பட்டிருக்குமென்பதை நாம் கற்பனையிலும் காணமுடியாத அளவினவேயாம். ஆண்டு திருதராட்டினன் மாத்திரம் சகஜமாக இருக்கின்றான். இவன் நிலையை வில்லிபுத்தூரார்,

"நாணே முதலா நாற்குணனு
நண்ணுங் கற்பு நயந்தணிந்த
பூணே யனையா ளழுதாற்றிப்
புன்பே ரவையிற் புகுஞ்சோகங்
காணே மென்று நிலநோக்கிக்
கதிர்வே னிருப ரிருந்திரங்க
கோணே நேர்பா டாயிருந்தான்
குருடென் றுரைக்குங் கொடி
யோனே.

என்று கொடும்பாவியாகிய திருதராட்டினன் கோணலையே நோக்கக் கருதிச் சும்மா இருந்தான் என்பதாகக் கடைசி அடியால் தந்து நிற்கிறார். திரௌபதியின் சோகநிலையை ஆசிரியர் அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார்:

"வாருங் கண்ணீர் வளர்கொங்கை
வரைமே லருவி யெனவீழத்
தாருங் குழலு மின்னுடனே
தலஞ்சேர் கொண்ட லெனவீழக்
கூருந் துயரி னுடன்வீழ்ந்து
கோகோ வென்று கோச்சபையிற்
சோருங் கொடியை முகநோக்கித்
துச்சாதனன்மெய் சுடச்சொன்னான்"

துச்சாதனன் மெய் சுடச் சொன்ன வார்த்தைகளோ? சொல்லுந்தரமன்று.

"நீ புலம்பி வீணே பாசாங்கு செய்யவேண்டாம். பொது மகளிர்க்கு விழிநீர் அரிதோ? உன் மாமன், கொழுநர்ஐவர் இருக்கும்போது ஈண்டு கண்ணீர் சொரிந்து அழும்படி உனக்கு என்ன கதியின்மை நேரிட்டது. இப்படியே அவள் உள்ளம் புண்படத் தருமன் முதலானவர்கள் ஆத்திரம் அடையக் கூறுகிறான் கொடிய துச்சாதனன்.

திரௌபதி சபையோரை நோக்கி நீதிகூறுமாறு வேண்டுகிறாள்:

பெரியோர்களே! தருமபுத்திரன் தன்னைத் தோற்றபின் என்னைத் தோற்றானோ? அல்லது என்னைத் தோற்றபின் தன்னைத் தோற்றானோ? இவ்விஷயத்தைப்பற்றி நீங்கள் உண்மை கூறுங்கள். அங்கிருந்த அரசர்கள் யாவரும் துரியோதனனுக்குப் பயந்து நியாயங் கூறாது மௌனமாக இருந்துவிட்டனர். இராவணன் தம்பி விபீஷணன் போன்ற துரியோதனன் தம்பியாகிய விகர்ணன் மாத்திரம் திரௌபதி கேட்பது நியாயந்தான் என்பதை விளக்கிக் கூறுகிறான். கூறிப்பயனென்? துரியோதனன் விகர்ணனைக் கடிந்துவிட்டுத் திரௌபதியின் துகிலை உரியுமாறு கட்டளையிடுகிறான். இக் கட்டம் திரௌபதியின் கற்புநிலையைத் தெளிவுபடுத்தி நிற்பது எனலாம். துச்சாதனன் துகிலுரியத்தொடங்கியபோது திரௌபதி தனக்கு நேரும் மானபங்கத்தைச் சிந்தித்துக் கண்ணீர் ஆறாகப் பெருகவும் அவிழ்ந்த கூந்தல் அவ்வாறே விரிந்து கிடக்கவும் கோவிந்தா! கோவிந்தா!! என்று பலதரம் கூவி விளித்து நிற்கின்றாள். துச்சாதனன் கை சலித்துவிட்டது. வீடுமர் முதலானோர் அவளைக் கற்புடைத் தெய்வமாகவே கருதிக் கைகூப்பி வணங்குகின்றனர்.

பாண்டவர் உள்ளம் மலர்கின்றது. ஈண்டு சகுனியின் சூது நாடு நகர் இழக்கச் செய்வதாயினும் பாண்டவரின் பத்தினி திரௌபதியின் கற்பை விளங்கச்செய்து நிற்கின்றது. தருமனின் பொறுமை இவ்வளவென்று சொல்ல முடியாத பெருமையை அளித்து நிற்கின்றது. நீதி எது அநீதி எது என்பதை உலகம்பகுத்துணருமாறு வகுத்து நிற்கின்றது.

# மேனாட்டுப் பெண்மணிகள்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

மறுநாட் காலை 25-9-50 9 மணியளவில் பிரிட்டிஷ் கவுன்சிலின் பிரதிநிதி வந்து என்னைச் சந்தித்தார். நான் பிரித்தானியாவில் பார்க்க வேண்டிய இடங்களையும் தரிசிக்கவேண்டிய கூட்டுறவுச் சங்கங்களையும் திட்டப்படுத்துவதற்காக என்னைப் பிரிட்டிஷ் கவுன்சிலின் தலைவர் காண விரும்புவதாக அறிவித்தார். நான் அதற்கு உடன்பட்டு அவர் எனக்காகக் கொண்டுவந்த மோட்டார் வண்டியில் ஏறிப் பிரயாணமானேன். அன்று மத்தியானம் பிரிட்டிஷ் கவுன்சிலின் தலைவரும் இன்னும் சில உத்தியோகஸ்தரும் கூட்டுறவுப் பகுதிப் பிரசார அமைச்சரும் நானும் மத்தியானப் போசனத்துக்கு ஒன்றாக இருந்தோம். எமது போசனம் முடிய மூன்பின் ஒன்றரை மணித்தியாலம் சென்றது. ஆனால் இந்த நேரத்திற்குள் நான் அடுத்த இரு வாரங்களிலும் அதன்பிறகும் என்னென்ன பார்க்க வேண்டும் என்னும் விஷயம் தீர்மானிக்கப்படலாயிற்று. மேனாட்டார் பல முக்கியமான விஷயங்களை உணவு அருந்தும் போதே நிச்சயித்துக் கொள்ளுகிறார்கள்.

## பெரும் பூங்கா

அன்று பிற்பகல் என்னை கிக்யூ கார்டின்ஸ் எனப் பெயர்கொண்ட பூந்தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார்கள். இதைப் பார்த்தவுடன் பேராதனைப் பூந்தோட்டம் நினைவுக்குவந்தது. அங்கே பலவிதமான பூச் செடிகளும் உலகத்தில் பல தேசங்களிலும் உள்ள விருட்சங்களும் காணப்பட்டன. உஷ்ணதேசத்தில் வளரும் தென்னைக்கும் அங்கே இடம் கிடைத்திருக்கின்றது. உஷ்ண தேசங்களில் உண்டாகும் மரங்களைத் தனியாக ஓர் கண்ணாடி மண்டபத்தில் வைத்து வெந்நீர்க்குழாய்கள் மூலம் அளவான வெப்பம் கொடுத்து வளர்க்கின்றார்கள். இந்தப் பூங்காவில் அழகிய சிறு தடாகங்களும் சயாம் தேசத்தில் உள்ள பகோடா என்று சொல்லப்படும் புத்த ஆலயத்தின் மாதிரிக் கோபுரமும் இருக்கின்றன. இன்னும் அங்கே ஒரு அரண்மனையும் உண்டு. இதை கிக்யூ பலஸ் என்று சொல்வார்கள்.

—தொடரும்

## ஓமந்தையில் வரவேற்பு
### மந்திரியும் பிரதிநிதியும் விஜயம்

சென்ற செவ்வாய்க்கிழமை (20-3-51) பிற்பகல் சுகாதார மந்திரி எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களுக்கும், வவனியாப் பிரதிநிதி திரு. ஸி. சுந்தரலிங்கம் அவர்களுக்கும் வரவேற்புக் கூட்டம் ஒன்று ஓமந்தை அரசினர் பாடசாலையில் பெற்றார் ஆசிரியர் சங்கச் சார்பால் வவனியாப் பட்டின சங்கத் தலைவர் முகாந்திரம் பி. தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைமை யாசிரியர், திரு. செ. சிவலிங்கம் அவர்கள் மந்திரிக்கும், வவனியாப் பிரதிநிதிக்கும் மாலை சூட்டினார். மாணவரின் விளையாட்டத்தைக் கண்ணுற்று அனைவரும் களிப்புற்றனர்.

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து ஈழநாட்டு இளைஞர் கழகத்தினர் ஆறுமுகநாவலர் அவர்கள் பெயரால் உதவிச் சம்பளம் அளிக்கவென ஒரு திட்டம் வகுத்துப் பணந் திரட்டி அதனை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து ஆட்சியாளரிடம்ஒப்புவித்துள்ளனர்.

செலவு நீக்கி நிதிக்கென எஞ்சிய பணம் ரூ. 500 ஆகும்.

இது சம்பந்தமான விபரம் அறிக்கையாக ஈழநாட்டு இளைஞர் கழகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது.

இத்துறையில் உழைத்த அன்பர்கள் அனைவருக்கும் ஈழநாட்டு இளைஞர் கழகத்தினர் நன்றி தெரிவிக்கின்றனர்.

## மானிப்பாய்க் கோவிற்பற்று முன்னேற்றச் சங்கம்

மானிப்பாய்க் கோவிற்பற்று முன்னேற்றச் சங்கத்தின் மூன்றாவது வருடாந்தக் கூட்டம் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில கலாசாலை மண்டபத்தில், சங்கத் தலைவர் எஸ். எச். பேரின்பநாயகம் அவர்கள் தலைமையில் சமீபத்தில் நடைபெற்றது. காரியதரிசியினதும், தனாதிகாரியினதும் அறிக்கைகளைச் சபை ஏற்றது. பின்னர் சங்க உத்தியோகஸ்தர்களாகத் திருவாளர் வி. வீரசிங்கம் B. A. தலைவராகவும், திருவாளர்கள் வி. மகேசன், எஸ். இராசேந்திரன், வி. சுந்தரம்பிள்ளை உப தலைவர்களாகவும், திரு. த. சண்முகதாசன் நிர்வாகக் காரியதரிசியாகவும், திருவாளர்கள் ஆர். ஸி. செல்லையாவும், எஸ். இராசாவும் இணைக்காரியதரிசிகளாகவும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபையும் ஏற்படுத்தப்பட்டது.

"இவ் வருடம் மழையில்லாமல் நெல் விளைவு அழிந்துபோனதால் மானிப்பாய்க் கோவிற் பற்று விவசாயிகளுக்கு ஏற்பட்ட பணக் கஷ்டத்தையும், உணவுக் கஷ்டத்தையும் விவசாய மந்திரிக்கு அறிவிப்பதுடன், அவரை ஏற்பட்ட கஷ்டத்தை நிவர்த்திக்க ஏற்ற வழிகள் தாமதமின்றி அமைக்க வேண்டும் என்றும், இச்சங்கம் வேண்டிக் கொள்கின்றது" என்ற தீர்மானம் சபையில்நிறைவேறியது.

## தொண்டமானாறு செல்வச்சந்நிதி
### ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் மகாசங்காபிஷேகம்

28 - 3 - 51 புதன்கிழமை காலை 10 மணிக்கு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு மகாசங்காபிஷேகமும், அன்றிரவு விசேஷ உற்சவமும் நடைபெறும்.

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 3418-ம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் 1951-ம் ஆண்டு பங்குனி மாதம் 16-ம் திகதியைக்கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் 1951-ம் ஆண்டு வைகாசி மாதம் 7-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி வரையில் அந்தக் காணிக்குள் நின்று முதலாவதாக மதிப்பின்படி காணிப் பங்காளருக்குள்ளும் பங்காளர் கேள்விக்காரராக இல்லாவிட்டால் மறு பேர்களுக்கிடையிலும் அதியுயர்ந்த கேள்விக்காரனுக்குப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### விபரம்

புலோலி தெற்கு
கந்தையா ஆழ்வாப்பிள்ளை
வழக்காளி

புலோலி தெற்கு
ஆழ்வாப்பிள்ளை முருகேசுவும்
மறுபேரும் எதிராளிகள்

### ஆதனம்

புலோலி மேற்கு மழுவராய குறிச்சியிலுறை. மயிலப்பை தெற்கு நிலப்பரப்பு 4. குளி $2\frac{14}{32}$. எல்லை: கிழக்கும் வடக்கும் கந்தையா ஆழ்வாப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு ஒழுங்கை. தெற்கு முருகப்பர் தம்பிராசாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது முழுவதும். இது 1949-ம் ஆண்டு ஆடி மாதம் 20-ம் திகதி உலாந்தா P. ஐயாத்துரையால் 119-ம் இலக்கத்தில் விஸ்தாரிக்கப்பட்ட படத்தில் விபரிக்கப்பட்டிருக்கிறது. பெறுமதி ரூபா 1450/-

S. C. Kanagasabai
கொம்மிஷனர்

புலோலி கிழக்கு
19-3-1951 [4267]

இப் பத்திரிகையில் வெளியாகும் ஊர்ஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.


## இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி
## THE CEYLON STATE MORTGAGE BANK

இந்த அரசாங்க ஈட்டு வங்கியிற் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையிற் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.

(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும், விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கி யிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.

வட்டி விபரம் பின்வருமாறு:— கடன் எடுக்குந் தொகை 5,000 ரூபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும்; 5,000 ரூபாவுக்குக் கூடியும் 10,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் $5\frac{1}{2}$ வீத வட்டியும்; 10,000 ரூபாவுக்குக் கூடியும் 50,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும்; 50,000 ரூபாவுக்குக் குறையாதிருந்தால் $4\frac{1}{2}$ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபரங்கட்கு 'மனேச்சர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, இல. 127, கேமேல் பிளேஸ்', கொழும்பு, என்ற விலாசத்திற்கு எழுதி அறியவும்.

[4244]



## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி
### 1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா ,34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை:
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு:
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத் தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை எம்மூலம் அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்

[4246]

*The* EeLAKESARI

T'Phone No. 805

NATIONALIST TAMIL WEEKLY

Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union

Vol. 21 | Chunnakam, Sunday, Mar., 25, 1951 | No. 34

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா:

இலங்கை-இந்தியா ரூ. 6-00

மலாயா — $ 6-00

தனிப்பிரதி சதம் 10. காசு 10

# கட்சிப் பிரசாரம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர் யு.என். பி. கட்சியிலும் வாய் வைத்திருக்கின்றார்" என்றேன்.

"என்ன போட்டுப் பிடிச்சிருக்கிறாரோ?" என்றார் முகத்தார்.

"அதையேன் பேசுவான். யு. என். பி. கட்சி முதலாளி வர்க்கத்தினரின் நன்மைக்காக நாட்டு மக்களைச் சுரண்டுவதெனத் தீர்மானித்திருக்கின்றதாம். பணக்காரரை மேலதிகமாகப் பணம் சேகரிக்கச் செய்வதுடன், ஏழைகளிடம் இருப்பதையும் பிடுங்குவதே அக்கட்சியின் திட்டமெனவும் அவர் தெரிவித்திருக்கின்றார்" என்றேன்.

"இந்த இங்கிலிசைப்பற்றி அந்த மனுஷன் என்ன சொல்லுறார்?" என்று ஆவலுடன் கேட்டார் முகத்தார்.

அரசாங்க மொழி விஷயத்திலும் முகத்தாருக்கு ஆர்வம் இருக்கின்றதென்பதை நான் முன்னரே அறிந்திருக்கின்றேன். ஆனபடியால் அவர் ஆங்கிலத்தைப்பற்றிக் கேட்டபோது எனக்கு அது நூதனமாக இருக்கவில்லை.

"முகத்தாரே, இலங்கையில் 90 சதவீதமானோர் சிங்களமும் தமிழுமே பேசுகின்றனர். அப்படியிருந்தும் யு. என். பி. ஆட்சியில் ஆங்கிலமே அரசாங்க மொழியாக இருந்து வருவதை இப் புதிய கட்சி கண்டித்திருக்கின்றது. தமிழையும் சிங்களத்தையும் அரசாங்க மொழிகளாக்குவதே ஸ்ரீ லங்கா குடியரசுக் கட்சியின் நோக்கங்களில் ஒன்றாகும். முகத்தாரே, சாராய நாதனையும் யூ. என். பி. ஆதரித்து வருகின்ற விஷயம் உமக்குத் தெரியுமல்லவா? சகல மதங்களும் மதுபானம் மகாபாவம் என்று போதிக்கின்றன. ஆனால் பௌத்தர்களும் இந்துக்களும் அதிகமாகவுள்ள இலங்கையில் யூ. என். பி. அரசாங்கம் சென்ற வருடம் 800,000 கலன் சாராயத்தை வடித்து நாட்டு மக்களுக்குக் கொடுத்துப் பணஞ்சம்பாதித்திருக்கின்றது. இது பெரிய வெட்கமல்லவா?" என்றேன்.

"அப்ப அந்தச் சில்வாவின்ரை கட்சி குடிவெறி கூடாதென்று சொல்லுது தோ?" என்றார் முகத்தார்.

"ஆமாம். மதுபானம் நாட்டுக்குத் தீமைதானே!" என்றேன் நான்.

"சாராயத்திலை சில்வா கை வைத்தால் அவருடைய கட்சிக்குச் சனங்கள் 'வோட்டு'ப் போடார்கள் என்றார் முகத்தார்.

"என்ன யூ. என். பி. கட்சியை அதிகார பீடத்தினின்றும் அகற்றி நாட்டைக் காப்பாற்றுவதற்கு ஸ்ரீ லங்கா குடியரசுக்கட்சி கங்கணங் கட்டி நிற்கின்றது. நீர் என்ன சொல்லுகிறீர்" என்றேன் நான்.

சரி, அதை இருந்து பாப்போம். அதென்ன, பத்திரிகையளுக்குக் கடிதம் எழுதிறதைப்பற்றி என்னனவோ சொன்னீரே?" என்று கேட்டார் முகத்தார்.

"கரிக்கு இளக்காரங் கொடுத்தாற் கிடைக்கு இரண்டு ஆடு கேட்குமாம்" என்பது போலிருக்கின்றது ஒரு சில பத்திரிகைகளின்போக்கு.' அந்த வெட்கமான காரியம் இப்போது எதற்கு?' என்று சொல்லிவிட்டு நான் பத்திரிகைகளைப் புரட்டலானேன்.

"ஓகோ! அப்படியோ சங்கதி" என்று சொல்லிக்கொண்டே முகத்தார் எழுந்தார்.

## இதய ஊற்று

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ணங்களாலும் அழிந்து போகாது. பழைய கார்கள் எண்ணெய் அடைத்துச் சில இடங்களில் நின்று தகராறு பண்ணுகிறதே. அதுபோல, லலிதாவின் காதல் ஊற்றும் அடைபட்டுப்போய் விட்டது.

மகாதேவன் இதயத்திற் காதல் ஊற்றுச் சுரப்பிகள் எப்பொழுதுமே நன்கு தொழிற்பட்டதில்லை. கற்பாறைகளைக் குடைந்து கிணறு வெட்டிக் கொண்டு போகும் பொழுது, ஆங்காங்கே கசிவான இடங்களில் தண்ணீர் பொசிகிறதே. அதே மாதிரி மகாதேவன் இதயத்திலும் காதல் பொசிந்தது. பொசிந்து பொசிந்து ஊறும் கிணறுகள் கடும் வரட்சிக்காலத்தில் நீர்ப் பொசிவே அற்றுப்போய் விடும். மகாதேவன் இதயம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தாமோதரத்தை நினைத்துப் புழுங்கியது. லலிதாவை விவாகஞ் செய்வோமா? வேண்டாமா? என்று ஊசலாடிய அவனுள்ளம இப்பொழுது முற்றாக வெறுத்தது.

மகாதேவனும், லலிதாவும், ஒருவருக்கொருவர் வெளியே காட்டிக் கொள்ளாமல் தூரத் தூர விலகினர். எனினும் ஒரு நாளாயினும் அவர்கள் சந்திக்காவிடினும், அவர்களுக்கு என்னவோ போல் இருந்தது. இது அவர்களுக்கே விளங்கவில்லை.

— தொடரும்

## பயங்கர நோய்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

5. பிள்ளைகள் ஆசனங்களில் எவ்வாறு இருக்கின்றனர் என்பதை ஆசிரியர்கள் கவனிக்கவேண்டும். கூனிக்கொண்டிருப்பது தவறு. இதை அவர்களுக்கு எடுத்துக்காட்டி நிமிர்ந்து இருக்கவேண்டிய அவசியத்தைப் போதிக்க வேண்டும்.

இவற்றை யெல்லாம் பள்ளிக்கூடங்களிற் போதிப்பது அவசியமெனத் தெரிவித்துள்ள வித்தியாதிபதி அவர்கள், பள்ளிக்கூட ஆசிரியர்கள் அனைவரும் இத்துறையில் ஒத்துழைத்து நாட்டிற் சயரோகம் உண்டாகாதிருக்கத் தொண்டாற்றவேண்டுமெனக் கூறியுள்ளார்.

# நகரசபை நிர்வாகம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டதெனத் தெரிகின்றது. இக்கோவிலின் தர்மகர்த்தாவான நியாயவாதி திரு ரீ. முத்துச்சுவாமி அவர்கள் இத் திருவுருவங்களை யாழ்ப்பாணத்திலுள்ள அரசினர் நூதன சாலைக்கு வழங்கியுள்ளார்.

### விளையாட்டுப் போட்டி

வடமாகாண சுயபாஷா பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி, யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி விளையாட்டு மைதானத்திற் சென்ற சனிக்கிழமை (17-3-51) பிற்பகல் உடல்நலக் கல்வி அதிகாரி டொக்டர் குணவர்த்தன அவர்களின் ஆதரவில் நடைபெற்றது. பல மாகாணங்களில் நடைபெற்றுவரும் விளையாட்டுப் போட்டி விழாக்களிலே தாம் பங்குபற்றியதாகவும், ஆனால் யாழ்ப்பாணத்து விழாவைப் போல ஏனைய விழாக்கள் சிறப்பாக நடைபெறவில்லை யெனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

### சிற்ப நிபுணர்

திரிகோணமலைப் பிரதிநிதி திரு. சிவபாலன் அவர்களின் அழைப்பை ஏற்ற ஸ்ரீ வி. எம். நரசிம்மன் (தென்னிந்திய புராதன நாகரிக சின்ன ஆராய்ச்சி நிபுணர், சிற்பக்கலை கோவில்கள் அமைப்பு இவற்றில் தேர்ச்சி பெற்றவர்) யாழ்ப்பாணம், கீரிமலை, நயினாதீவு முதலிய பிரசித்திவாய்ந்த இடங்களையும் தரிசித்தார்.

நயினாதீவிலே தற்போது நடந்துவரும் புதுப்பிப்பு வேலைகளை அவர் கண்ணுற்றார். பிற்பாடு அவை சம்பந்தமாக அன்னாரிடம் யோசனைகள் கேட்கப்பட்டன. மூலஸ்தானத்திற் சுவாமி தரிசனம் செய்ததற்குப் பின்னர் அவர் கூறியதாவது:— "இந்தத் தீவு ஒன்றிலே தான் பழைய நாகவணக்கம் முறைப்படியே அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இம் முறைக்குச் சிறிதும் பழுதேற்படாதவகையில் கோவில் ஆராதனை தரிசன வைபவங்களுக்கு ஏற்பாடாகியிருக்கிறது. இது மிகவும் அபூர்வமாகும். இந்த வகைய ஏற்பாடு வேறு ஒரு இடத்திலும் கிடையாது." இக்கோவில் சம்பந்தமான சாஸனங்களையும் இதற்குச் சமீபமாக உள்ள இடங்களையும் நன்கு ஆராய்ந்தால் மேற்படி புராதன வழக்கம்பற்றிப் பல தகவல்கள் கிடைக்கக் கூடும் என்று அவர் கருதுகிறார்.

கீரிமலையில் உள்ள சரித்திரப் புகழ்பெற்றதும், புனிதத் தன்மை மிகுந்ததுமான புண்ணிய தீர்த்தத்தைப்பற்றி ஸ்ரீ நரசிம்மன் பெரிதும் ஆச்சரியமுற்றார். இலங்கையின் வடபகுதியில் இந்துக்களின் நாகரிகமும், கலாசாரமும் வெகு காலத்துக்கு முன்னமேயே வியாபித்திருந்தது என்பதற்கு இது சான்றாக விளங்குகிறது. பாரமார்த்திகத் துறையிலும் சரி, சுகாதாரத்தை யொட்டியும் சரி இப் புண்ணிய தீர்த்தத்தைச் சரிவரப் பாதுகாத்து வரவேண்டியது அவசியமாகும்.

திரிகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் தற்போது பல கோயில்கள் புதுப்பிக்கப்பட்டு வருவது கண்டு ஸ்ரீ நரசிம்மன் அகமகிழ்ந்தார்.




யாழ்ப்பாணம் - மயிலிட்டி தெற்கு, திருமகள் நிலயம் நா. பொன்னையா அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1951-ம் ஆண்டு மார்ச்சு மீ 25உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப் பெற்றது.